விழி உங்களிடம்
அதன்
ஒளி எங்களிடம்
எரிக் கணேஷ்
(மூக்குக் கண்ணாடி விற்பனையாளர்)
566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
[34538]

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

விழி உங்களிடம்
அதன்
ஒளி எங்களிடம்
ERIC GANESH
OPTICIANS
566, HOSPITAL ROAD, JAFFNA.
[34538]

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 26 செவ்வாய்க்கிழமை (10 – 01 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 45

# போர் நிறுத்த விதிமுறைகளை கடைப்பிடிக்க முழு ஒத்துழைப்புக் கோருகின்றனர் புலிகள்!

## பதவிகளை ராஜினாமா செய்தார் லயனல்!



கொழும்பு, ஜன. 10
தகவல் தொடர்பு, சுற்றுலா, விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் மற்றும் ''லேக் ஹவுஸ்'' பத்திரிகை நிறுவனத் தலைவர் பதவிகளில் இருந்து லயனல் பெர்னாண்டோ இராஜினாமாச் செய்திருக்கிறார்.

இதனையடுத்து —

தகவல் தொடர்பு, சுற்றுலா, விமானப் போக்குவரத்து அமைச்சின் பதில் செயலாளராக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டபிள்யூ. பி.எஸ். ஜெயவர்த்தனாவும் —

''லேக் ஹவுஸ்'' நிறுவன பதில் தலைவராக அதன் பணிப்பாளர்களில் ஒருவரான லக்ஷ்மன் ஜெயவர்த்தனாவும் நியமிக்கப்பட்டனர்.

விடுதலைப் புலிகளுக்கும் — அரசுத் தரப்பினருக்கும் இடையிலான முதலாம் கட்டப் பேச்சுவார்த்தைகளின் போது

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கண்காணிப்புக் குழுவினர் நேற்று வந்து சேரவில்லை

யாழ்ப்பாணம், ஜன. 10
போர் இடைநிறுத்தத்தை கண்காணிப்பதற்காக யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்து சேர்வர் என எதிர்பார்க்கப்பட்ட — வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அடங்கிய — கண்காணிப்புக் குழுவினர் நேற்று வந்து சேரவில்லை.

இன்று அக்குழுவினர் யாழ்ப்பாணம் வருவார்களா என்பது குறித்து எந்தவித தகவலும் நேற்று மாலை 6.30 மணி வரை யாழ்ப்பாணத்துக்குக் கிடைக்கவில்லை.

(உ-3-173)

## கண்காணிப்புக் குழுவுக்கு நியமனம் முடியவில்லை

கொழும்பு, ஜன. 10
போர் இடைநிறுத்தத்தைக் கண்காணிக்கும் குழுவினரின் நியமனங்கள் இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புக் குழுவில் இடம்பெறும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இதுவரை வராததே இதற்குக் காரணம் என்றும் பி.பி.ஸி. தெரிவித்தது.

போர் இடை நிறுத்தத்தை கண்காணிக்கும் மன்னார் மாவட்டத்துக்கான குழுவில் அரசின்சார்பில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் வண. ஜி. பி. தேவராஜனும், சட்டத்தரணி என். போஸ்ரினும் இடம் பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேபோன்று—

வவுனியா மாவட்டத்துக்கான அரச குழுவில் சிரேஷ்ட அரச அதிகாரி ஒருவரும், பௌத்த பிக்கு ஒருவரும் இடம்பெற்றிருப்பதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

[உ-ஜ-6]

### யாழ். மாவட்டத்துக்கான

## கண்காணிப்புக் குழு செயலகத்தில் இயங்கும்

கொழும்பு, ஜன. 10
யாழ். மாவட்டத்தில் போர் இடைநிறுத்தத்தைக் கண்காணிக்கும் குழுவின் அலுவலகம் யாழ். செயலகத்தில் இயங்கவிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

சர்வதேச அமைப்பு பிரதிநிதி ஒருவரின் தலைமையின் கீழ் செயற்படவிருக்கும் இக் குழுவில் இடம்பெறும் அரச பிரதிநிதிகளும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் இந்த அலுவலகத்தில் இருந்து பணிபுரிவார்கள்.

இவர்களுக்கு தேவையான அலுவலக உதவி வேலைகளை யாழ். அரச அதிபர் தனது பணியாளர்கள் ஊடாக வழங்குவார் என்றும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இக்குழுவினர் உடனுக்குடன் அரச உயர் மட்டத்துடனும், இராணுவ அதிகாரிகளுடனும் தொடர்புகொள்ள கொழும்பு — யாழ் நேரடி தொலைபேசி வசதியும் செய்து கொடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

## போர் இடைநிறுத்தம் பற்றி ராணுவ அதிகாரிகள் மகிழ்ச்சி

யாழ்ப்பாணம். ஜன.10
தற்போது நடைமுறையில் இருக்கும் போர் இடைநிறுத்தம் குறித்து சிறீலங்கா இராணுவ உயர் அதிகாரிகள் நேற்று கொழும்பில் மகாநாடு ஒன்றை நடத்தினர் என்றும்—

போர் இடை நிறுத்தம் குறித்து அங்கு இராணுவ அதிகாரிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர் என்றும்—

கொழும்புச் செய்திகளை மேற்கோள்காட்டி ''புலிகளின் குரல்'' வானொலி அறிவித்தது.

போர் இடைநிறுத்தம் அமுலுக்கு வந்தது முதல் எதுவித மீறல் சம்பவங்களும் இடம்பெறவில்லை என்று சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

(உ-4)

## மக்களிடம் பகிரங்க வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜனவரி 10
போர் இடைநிறுத்த விதிகளை நேர்மை, நியாயத்துடன் கடைப்பிடித்துத் தொடர்ந்து பேணுவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பை தமிழீழ விடுதலைப் புலிகள் கோரியிருக்கின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையின் யாழ். மாவட்டச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

''ஸ்ரீலங்கா படையினரின் நிலைகளுக்கு அண்மையில் உள்ள தமது சொத்துக்களை பார்வையிடச் செல்லும் மக்கள் அது தொடர்பாக அப்பிரதேச பொறுப்பாளர்களுடன் தொடர்புகொள்ளவும்.

''படை அதிகாரிகளுக்கும் எமக்கும் (புலிகளுக்கும்) இடையே இடம்பெறும் பேச்சுக்களில் இது தொடர்பான முடிவுகள் எடுக்கப்படும்.

''பின்னர் சொத்துக்களைப் பார்வையிடச் செல்வதற்கான அனுமதி எம்மால் வழங்கப்படும்.

'எமது அனுமதி கிடைக்கும் வரை மக்கள் எவரும் குறித்த பகுதிகளுக்குள் பிரவேசிக்க வேண்டாம் என்க்கேட்டுக்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### விதிகளை மீறிய 6 மீனவர் நேற்று படையினரால் கைது!

## மீன் பிடிக்க ராணுவ நிலைகள் அருகே செல்ல வேண்டாம் என அறிவுறுத்து!

யாழ்ப்பாணம், ஜன. 10
படையினரின் நிலைகளுக்கு அண்மையில் சென்று தொழிலில் ஈடுபட்ட மீனவர்கள் ஆறு பேர் நேற்று இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

குறிப்பாக மண்டைதீவு, அரியாலை, அராலி, பொன்னாலை ஆகிய கடற்பிரதேசங்களில் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் போர் இடைநிறுத்த ஒழுங்கு விதிகளை மீறியுள்ளனர் என்றும் —

அவர்கள் இராணுவப் பிரதேசங்கள் மற்றும் நிலைகளுக்கு மிக அண்மையில் சென்றதாக இராணுவத்தினரால் தங்களுக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் —

அரசியல்துறையினர் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

மீனவர்கள் ஒழுங்கு விதிகளை மீறுவதால் மேற்குறிப்பிடப்பட்ட கடற் பிரதேசங்களில் மீன் பிடிக்கும் செயற்பாடுகளை முழுமையாக நிறுத்த வேண்டிய நிலை ஏற்படலாம் என்றும் —

ஒழுங்கு விதிகளை மீறும் ஒரு சில மீனவர்களால் ஒட்டு மொத்தமாக இப்பிரதேசத்தில் மீன் பிடித் தொழிலில் ஈடுபடும் மக்கள் பாதிப்படை

(6ஆம் பக்கம் பார்க்க)

## பகல் வேளை மட்டுமே மீன் பிடிக்க அனுமதி!

### அதுவும் தடை தளர்த்தப்பட்ட பிரதேசங்களில்தானாம்!!

கொழும்பு, ஜன. 10
வடக்கு கிழக்கு மாகாணத்தில் பல இடங்களிலும் மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை உடனடியாகத் தளர்த்தப்படுவதாக ஸ்ரீலங்கா அரசு அறிவித்துள்ளது.

இதற்கேற்ப தற்போதுள்ள அவசரகால விதிகளில் திருத்தம் செய்யப்படுவதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

மீன் பிடிக்க தடை தளர்த்தப்பட்டிருக்கும் இடங்களின் விவரமும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த இடங்களில் காலை 5 மணி முதல் மாலை 5 மணிவரை மட்டுமே மீன் பிடிக்க அனுமதிக்கப்படும் என்றும் பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீன் பிடிப்பதற்கு தடை தளர்த்தப்படாத பகுதிகளில் முன்னர் அமுல்படுத்தப்பட்ட உரிய ஒழுங்கு விதிகளை கடற்படையினர் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் கடுமையாக நடைமுறைப் படுத்துவார்கள் என்பதை பொது மக்களுக்கு அரசாங்கம் தெரியப்படுத்துவதாகவும் அறிவிக்கப்பட்டது.

**வடக்கில்**

நெடுந்தீவைச் சுற்றி இரண்டு மைல்கள் கொண்ட கடற் பிரதேசம் —

(6ஆம் பக்கம் பார்க்க)

## போராட்டத்தை நசுக்கும் திட்டத்தை முறியடித்தவர்கள் கடற்புலிகள்

### நினைவாலய திறப்புவிழாவில் சூசை

தென்மராட்சி, ஜன. 10
தமிழீழப் பிரதேசத்தில் கடல்வழி ஊற்றுகை போடுவதன் மூலம் தமிழ் மக்களின் போராட்டத்தை முறியடித்து விடலாம் என்று ஸ்ரீலங்கா அரசும், இராணுவத்தினரும் நினைத்தனர்.

ஆனால் கடற்புலிகளின் தீரத்தினாலும், தியாகத்தினாலும் அவர்களின் அந்த நினைவு வெறும் கனவாகிவிட்டது.

இவ்வாறு தெரிவித்தார் கடற்புலிகளின் விசேட தளபதி சூசை.

கிளாலி கடற்பரப்பில் காவியமான மாவீரர்களின் நினைவாக எழுதுமட்டுவாழ் சந்தியில், கிளாலி பொதி சுமக்கும் வாகன சேவைகள் சங்கத்தினால் ஐந்து லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நினைவாலயத்தை

(5ஆம் பக்கம் பார்க்க)

## வத்திக்கானின் மன்னிப்பை ஏற்க பிக்குகள் மறுப்பு

### பாப்பரசரே கோர வேண்டுமாம்

கொழும்பு, ஜன. 10
பௌத்த மதம் குறித்து தாம் எழுதிய கருத்துக்கு பாப்பரசர் நேரடியாக மன்னிப்புக் கேட்காதவரை அவரின் இலங்கை வருகை தொடர்பான நிகழ்ச்சிகளைப் புறக்கணிக்கும் தீர்மானத்தை தாங்கள் விலக்கிக் கொள்ளப் போவதில்லை என கொழும்பில் பௌத்த சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்திருப்பதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று வெளியிட்டது.

பாப்பரசர் எழுதியுள்ள கருத்திற்கு கடந்த சனியன்று வத்திக்கான் வெளியுறவு அமைச்சர் வருத்தம் தெரிவித்திருந்தது தெரிந்ததே.

ஆனால் வெளியுறவு அமைச்சர் வருத்தம் தெரிவித்திருப்பது மட்டும் போதாது, பாப்பரசரே வருத்தம் தெரிவிக்க வேண்டும் என பௌத்த சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது

### கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம் ஜன. 10
கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

(ஜ-3)

## படையினர் – புலிகளின் "ஹலோ" குரல்கள்

கொழும்பு, ஜன. 10
விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையில் போர் இடைநிறுத்த உடன்பாடு நடைமுறைக்கு வந்திருப்பதை அடுத்து

ஒவ்வொரு பிரதேசத்திலும் விடுதலைப் புலிகள்— ஸ்ரீலங்காப் படையினர் தொடர்பு கொண்டு செயற்படுவதற்காக இரு தரப்பில் தொடர்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

இரு தரப்பு தொடர்பு அதிகாரிகளும் வானொலித் தொடர்பு மூலம் உரையாடுவதையும்—

''ஹலோ! யார் அங்கே? எப்படி சுகம்? (Helo Who is there? How are You?'') என்ற பாணியில் உரையாடல்களில் அவர்கள் ஈடுபடுவதையும்—

கேட்கக் கூடியதாக இருந்தது என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டது

(உ-3)

### வடக்கு - கிழக்கில்

## ஆயுதமின்றி வரும் புலிகளை கைது செய்யக் கூடாது!

### பொலீஸ்மா அதிபர் உத்தரவு

கொழும்பு, ஜன. 10
வடக்கு—கிழக்கு மாகாணத்தில் ஆயுதம் இன்றி நடமாடும் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளை கைது செய்யவோ அல்லது அவர்கள் தொடர்பாக பிற நடவடிக்கைகளில் ஈடுபடவோ வேண்டாம் என பொலீஸ் மா அதிபர் பிராங் டி சில்வா பொலீஸ் நிலையங்களுக்கு அறிவித்துள்ளார்.

இதேவேளை —

விடுதலைப் புலிகள் ஆயுதங்கள் இன்றி, சிவில் விநியோக ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக நகரங்களுக்குள் வருவதற்கு இணக்கம் காணப்பட்டிருப்பதாக இந்திய வானொலி, இலங்கை நிலவரம் குறித்து அதன் கொழும்புச் செய்தியாளர் எழுதிய விமர்சனக் கண்ணோட்டம் ஒன்றில் ஒலிபரப்பியது. (உ-4)

### மூன்றாம் கட்ட பேச்சின்போது

## கொழும்பு செய்தியாளர் வருவது நிச்சயமில்லை

யாழ்ப்பாணம், ஜன, 10
எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவிருக்கும் 3 ஆம் கட்டப்பேச்சுக்கள் தொடர்பான செய்திகளை சேகரிக்க கொழும்பிலிருந்து வெளிநாட்டு, உள்நாட்டு பத்திரிகையாளர்கள் யாழ்ப்பாணம் வருவதற்குசாத்தியம் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் இருந்து செய்தியாளர்கள் யாழ் வந்து உடன் திரும்புவதற்கு விமான கப்பல் வசதிகள் இல்லாத காரணத்தாலும் —

பேச்சு நடத்தவரும் குழுவினர் சனிக்கிழமை காலை வந்து அன்று மாலையே கொழும்பு திரும்புவதால்

(6ஆம் பக்கம் பார்க்க)

### பதுளை கலன் குறூப்:

## வேலை நிறுத்தக்காரர் மீது குண்டர்கள் தாக்குதல்

கொழும்பு, ஜன. 10
பதுளை கலன் குறூப் தோட்டத்துக்கு இரு லொறிகளிலும், இரு டிராக்டர்களிலும் வந்த குண்டர் குழு ஒன்று அங்குள்ள தோட்டத் தொழிலாளர்களை தாக்கியதால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது

நேற்று முன் தினம் காலை 11 மணியளவில் அந்த தோட்டத்துக்கு சென்ற இந்தக் குண்டர் குழு அங்குள்ள தொழிலாளர்களை தாக்கியதாகவும்—

தொழிலாளர்களுக்கும் அவர்களுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றதாகவும்—

அங்கு தற்சமயம் பதற்ற நிலை காணப்படுவதாகவும்— தெரிய வந்தது.

கலன் தோட்டத்தை பௌத்த விகாராதிபதி பொறுப்பேற்றதும்—

அதைக்கண்டித்து தொழிலாளர் கடந்த ஒருமாத காலமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளமையும்— தெரிந்தவையே. (இ-3)

## வாயுக் கிணறு தீப்பிடித்து 100 மீற்றர் உயரச் சுவாலை!

### ஆந்திராவில் பெரும் விபத்து!!

புதுடில்லி, ஜன. 10
ஆந்திரப் பிரதேசம் அமலைபுரம் என்ற இடத்தில் உள்ள எண்ணெய்க் கிணறு ஒன்று வெடித்து தீப்பிடித்ததில் அங்கு பெரும் தீச்சுவாலை ஒன்று எழுந்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

கிணறு வெடித்து தீப்பற்றி எரிய ஆரம்பித்து 24 மணி நேரத்தின் பின்னரும் — நேற்றிரவு வரை — சுமார் நூறு மீற்றருக்கும் கூடிய அளவு உயர தீச்சுவாலையுடன் வாயுக்கிணறு கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது.

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 70ஆவது வயதில்
## வாழ்த்துகிறோம்



திருமூலர் அருளிய ''அன்பே சிவம்''
வாக்கின்படி

**சிவத்தமிழ் செல்வி**
**தங்கம்மா அப்பாக்குட்டி**

வாழ்ந்து தமிழுக்கும் தமிழ் இனத்திற்கும் விடி வெள்ளியாக தோன்றி ஆற்றிய பணிகள் மறக்க முடியாதவை.

அவரது பணிகள் தொடர துர்க்கை அம்மன் அருள் புரிவாராக.

**குகன் ஸ்ருடியோ,**
பருத்தித்துறை.

[சி-134]

---

## வாரிவளவு நல்லியக்கசபை
காரைநகர்

*ஆண்டு ஐந்து 1994 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த காரை மாணவர்களுக்கு*
அமரர் திருமதி
**கமலாதேவி கனகசபை**
*அவர்களின் ஞாபகார்த்த*

## பரிசில்கள் வழங்கல்

*காலம்:* 1995 — 01 — 13 வெள்ளிக்கிழமை
*நேரம்:* நண்பகல் 12-00 மணி
*இடம்:* யா/வலந்தலை தெற்கு அ.மி த.க.பா.
*பிரதம விருந்தினர்.*
செல்வி திலகவதி பெரியதம்பி அவர்கள்
(கல்விப் பணிப்பாளர் யாழ். வலயம் 1)

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

– செயலர்.

ஆதரவு:
சிவகணேசன் பட்டுச் சோலை
யாழ்ப்பாணம்.

[34625]

---

## தேவை

ஆங்கில மொழி பெயர்ப்பாளர் தேவை. தகைமை அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும் (வயதெல்லை இல்லை)

**விண்ணப்ப முடிவு திகதி: 20 - 01 - 1995**

★ விண்ணப்பங்கள் நேரிலோ, கடித மூலமோ ஏற்றுக் கொள்ளப்படும்.

முகவரி:
**பெண்கள் ஆய்வு நிறுவனம்,**
*இராச வீதி, கல்வியங்காடு,*
*கோப்பாய்.*

[34629]

---

## NOTICE

### JAFFNA MEDICAL ASSOCIATION

Lecture: Diabetes Mellitus & Kidneys
By
Dr. M Anpalahan MD MRCP
Consultant Physician
Venue: Nurses Training School GH Jaffna
Date: 11th January 1995
Time: 6 p.m.

Dr. T. Rajajane,
Hony Secretary,
J. M. A.

Medical Library,
Gen. Hospital (Teaching)
Jaffna.

[8191]

---

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
## வடமராட்சிக் கோட்டம்
## விசேட பொதுக்கூட்டம்

சகல தனியார் கல்வி நிலையங்களினதும் நிர்வாகிகள் அங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள், பிரத்தியேக வகுப்பு நடத்துபவர்கள், தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

*இடம்:* சதாபொன்ஸ் மாலு சந்தி,
*காலம்:* 11—01—1995 புதன்கிழமை
*நேரம்:* பி.ப. 4.00மணி

செயலாளர்.
வடமராட்சிக் கோட்டம்.

(சி/133)

---

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை.

வெளிவாரிப்
பட்டப்படிப்பு
கற்கை நெறிகள் -
கல்வியாண்டு 1993/94

*முதல் கலை/*
*முதல் வர்த்தகம்/*
*பொதுக்கலை*
*பகுதி - I/*
*சிறப்புக்கலை*
*பகுதி - I/*
*வர்த்தகம் பகுதி - I*

மேற்குறிப்பிட்ட கற்கை நெறிக்கான பதிவு 16-1-1995 வரை ஏற்கப்படும். அதற்குப் பின் பதிவு எக்காரணம் கொண்டும் ஏற்கப்படமாட்டாது.

—பதிவாளர்.

(சி-135)

---

## மலிவு விற்பனை

எங்களிடம்:

✶ சண் (SUN) மார்க் நூல் வகைகள்
✶ இறக்குமதி செய்யப்பட்ட 'BRATAPE எலாஸ்டிக்'

*மலிவு விலையில் கிடைக்கும்.*

**சிறி முருகன்**
*303, காங்கேசன்துறை சாலை,*
*யாழ்ப்பாணம்.* (34634)

---

## அறிவித்தல்

### மலிவு விலையில்
**லுமாலா துவிச்சக்கரவண்டி விற்பனை**
[ஆண்கள்/பெண்களுக்கானது]

மலிவு விலையில் துவிச்சக்கரவண்டிகள் (அனைத்தும் பொருத்தப்பட்டது) வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் விற்பனைக்குண்டு. தேவைப் படுவோர் தொடர்பு கொள்ளவும்.

**பொது முகாமையாளர்,**
வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

(சி/140)

---

## O/L 95 DAY CLASS

பாடசாலை செல்லாத மாணவர்களுக்குரியது

| | |
|---|---|
| MATHS — திரு. ரட்ணவேல் | SCIENCE — திரு சங்கர் வாமன் |
| TAMIL — திரு. P. சாந்தன் | SOCIAL — திரு ஸ்ராலின் |
| ENGLISH — திரு. ராஜரட்ணம் | சமயம் — திரு. ஸ்ரீஸ் |
| COMMERCE— திரு. T. வாமதேவா | ENG. LIT. — திரு. தாசன் |

*திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி நாட்களில்*

அனைத்துப் பாடங்களுக்கும் — மாதாந்த பயிற்சிப் பரீட்சைகளுடன்

*ஆரம்பம்:* **10-01-1995**
**BOND கல்வி நிறுவனம்,**
58A, *ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.* (8190)

---

### மகளிருக்கான
## மனைப்பொருளியலும்
## கைத்திறனும்
### 6 மாத கால
## டிப்ளோமா பயிற்சி

✶ **கேக் ஐசிங்**
*(பட்டர் ஐஸிங், றோயல் ஐஸிங், பாச்மன்ட் ஐஸிங், (F) புறோஸ், ரிங் ஐஸிங், (F) பொன்டன்ட் ஐஸிங் மற்றும் மாச்சீனி அலங்காரங்கள் (Sugar Crafting)*

✶ **உணவு தயாரித்தல்**
*(கீழைத்தேச மேலைத்தேச உணவுகள், சிற்றுண்டிகள், சூப் வகைகள், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள், புடிங் வகைகள் தயாரித்தல், மரக்கறிகளைக் குடைந்து உருவங்கள் செய்தல், மற்றும் உணவை அலங்கரிக்கும் விதம், உணவு மேசை அலங்காரம், உணவு பரிமாறும் முறைகள் என்பன)*

✶ **உடை தயாரித்தல்:**
(குழந்தைகள், சிறுவர் மகளிருக்கான ஆடைகள் தைத்தல், மேசை, கதிரை விரிப்புக்கள், தலையணை உறை தைத்தல், பூப்போடுதல்)

✶ **கைவேலை**
*(கம்பளி நூல் வேலைப்பாடுகள், பஞ்சில் பொம்மைகள் செய்தல், கழிவுத் துணி வேலைப்பாடுகள், சுவர் மாட்டிகள், வைக்கோல் வேலை, கடுதாசி றிபன் வேலைகள் செய்தல்)*

✶ **பூ வேலை**
*(கடுதாசியிலும், துணியிலும் மலர்கள் செய்தல், ஸ்ரொக்கி நெற் மலர்கள், (P) பான்கிளே மலர்கள், டிப் இன் மலர்கள், சற்றின் றிபன் மலர்கள், மலர்ச் செண்டுகள் செய்தல்)*

★ மேற்படி டிப்ளோமா பயிற்சிகள் பயில்வோருக்கு இலவசமாக கூந்தல் அலங்காரங்கள், இந்து, கிறிஸ்தவ மணப்பெண் ஒப்பனை அலங்காரம், கோலம் வகுப்புகள் நடைபெறும்.

★ பயிற்சியின் முடிவில் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.

★ கிழமை நாள் பயிற்சிகள் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாட்களில் காலை 9 மணி முதல் பி. ப. 1-00 மணிவரை நடைபெறும்.

**ஆரம்பம்: 16 - 01 - 1995**

★ சனி, ஞாயிறு பயிற்சிகள் காலை 9 மணிமுதல் பி. ப. 2-30 வரை நடைபெறும்.

**ஆரம்பம்: 21 - 01 - 1995**

## கலாலயா
### தொழிற் பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்
[illegible]

[சி-273]

---

## நடமாடும் சிறுவணிகர்
## நலன் பேணும் மன்றம்
அமைப்பதற்கான
## அறிவித்தல்

நடமாடும் சிறு வியாபாரிகளின் நலன் பேணும் வகையில் மேற்படி மன்றம் ஒன்றினை அமைத்து அவர்களைத் தொழில் ரீதியாக ஊக்குவிப்பதற்கும், ஏனைய வகையில் மேம்படுத்துவதற்கும் ஏதுவான வகையில் கீழ் குறிப்பிடப்படும் வியாபாரத் தொழிலில் ஈடுபடுபவர்கள் திருமாட்டி புடைவையகம் அருகில், பலாலி வீதி, திருநெல்வேலியில் அமைந்திருக்கும் மேற்படி மன்றத்தின் பணிமனையில் தங்கள் உறுப்புரிமையைப் பதிவுசெய்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

1. கச்சான், கடலை வியாபாரிகள்.
2. நடமாடும் இனிப்புப்பண்ட வியாபாரிகள்.
3. நடமாடும் பழ வியாபாரிகள்.
4. நடமாடும் மரக்கறி வியாபாரிகள்.
5. நடமாடும் ஐஸ்பழ வியாபாரிகள். (துவிச்சக்கர வண்டி, தள்ளுவண்டி)
6. நடமாடும் அழகுசாதனப் பொருள்கள் வியாபாரிகள்.
7. நடமாடும் பனம் பொருள் உற்பத்தி வியாபாரிகள்.
8. எண்ணெய் வியாபாரிகள். (நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய்)
9. சிறு விளையாட்டுப் பொருள்கள் வியாபாரிகள்.

போன்ற ஏனைய நடமாடி / நகர்ந்து வியாபாரம் செய்யும் அனைத்து வியாபாரிகளும் பதிவில் உள்ளடக்கப்படுவர். (மொத்த வியாபாரிகள் நிரந்தரமாகக் கடை அமைத்து வியாபாரம் செய்வோர் பதிவு செய்யப்பட மாட்டார்கள்)

**பதிவுக் காலம்:**
*12-01-1995 முதல் முடிவு திகதி அறிவிக்கும் வரை 10 நாட்களுக்கு பதிவு இடம்பெறும்.*

**பதிவு செய்யும் நேரம்:**
*காலை 9 மணி முதல் பி. பகல் 3 மணிவரை.*

**பதிவு செய்யும் இடம்:**
*திருமாட்டி புடைவையகம் அருகில், பலாலி வீதி, திருநெல்வேலி என்னும் முகவரியில் அமைந்திருக்கும் நடமாடும் சிறு வணிகர் நலன் பேணும் மன்றப் பணிமனையில் பதிவு செய்யப்படும்.*

நன்றி.

**நடமாடும் சிறுவணிகர்**
**நலன் பேணும் மன்ற அமைப்புக் குழு.**
திருமாட்டி புடைவையகம் அருகில்,
பலாலி வீதி,
திருநெல்வேலி. 06-01-1995. (34640)

---

''மாணவர் சேவைக்காக ஒழுங்கும், கட்டுப்பாடும் நிறைந்த புதிய நிர்வாகத்தில்''

*மேலதிக ஆசிரிய குழாத்தின் இணையற்ற சேவையில்*

மீண்டும்.........

## "ஸ்ரார்"

**கனகரட்ணம் சந்தி, அரியாலை**

★ ஆண்டு 6 முதல் 10 வரை
★ O/L Dec. 1995 ற்கான
விசேட மீட்டல் பயிற்சிகளுடன் கூடிய வகுப்புகள்
★ ஆண்டு 4, 5 ற்கான
புலமைப் பரிசில் பரீட்சைக்கான சிறப்பு வகுப்புகள்
★ அலுவலர்கள், பல்கலைக்கழக மாணவர்களுக்கான SPOKEN ENGLISH பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும்.

## ஜனவரி 14இல் ஆரம்பம்

*வகுப்புகளில் மாணவர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.*
அனுமதிகளைப் பெற்று
இடங்களை உறுதிப்படுத்துங்கள்.

– இயக்குநர்.

[34637]

---

## 3-ம் ஆண்டு நினைவுகூரல்

மலர்வு: 01 — 09 — 1912



உதிர்வு: 01 — 10 — 1992

### அமரர் அந்தோனிப்பிள்ளை

*'':சீவியத்தில் என்னை நேசித்தவர்ளே*
*மரணத்திலும் என்னை மறவாதீர்கள்''*

ஐயா!
பூவுலகில் உமை இழந்து மூன்றாண்டு ஆனதுவோ!
மனவுலகில் உம்மோடு இவ் ஆண்டும் –
வாழ்கின்றோம்.

உம் உழைப்பின் உதிரத்தால்
இன்றும் நாம் வாழ்கின்றோம்.
உம் கூட்டில் குடியிருந்து நாம் வாழும்வரை
உந்தன் முகம் எம் கண்ணில் நிலைத்திருக்கும்.

உம் பிரிவால் துயருறும்:
மனைவி, மகள்.

புனித செபஸ்தியார் வீதி,
சில்லாலை.

(34628)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படை முகாம்களுக்கு மிக அருகே
# தொழிலுக்குச் செல்ல வேண்டாம்
## மீனவர்களுக்கு அரசியல்துறையினர் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஜன. 10

படைமுகாம்களுக்கு அருகே— தடைசெய்யப்பட்ட பிரதேசத்தில்— மீன் பிடிக்கச் செல்லவேண்டாம்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் செய்திக் குறிப்பு ஒன்றின் மூலம் அறிவித்துள்ளனர்.

போர் இடைநிறுத்த காலத்தில் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் குறித்து யாழ். மாவட்ட அரசியல்துறைச் செயலகம் விடுத்துள்ள அந்தச் செய்திக் குறிப்பின் விவரம் வருமாறு:

தமிழீழ விடுதலைப் புலிகளாகிய எமக்கும் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும் இடையே ஏற்பட்ட போர் இடைநிறுத்த உடன்படிக்கையின்படி சனி நள்ளிரவு முதல் தாக்குதல் தவிர்ப்பு நிலை அமுல்செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கான நடைமுறை விதிகளையும் நீங்கள் அறிவீர்கள்.

ஸ்ரீலங்காப் படைகளின் போர் நடவடிக்கைகளினால் சொந்த இருப்பிடங்களையும் சொத்துக்களையும் தொழில் நிலையங்களை இழந்து துன்ப துயரங்களுக்கு முகம் கொடுத்து பெரும் வாழ்க்கைச் சுமையைத் தாங்கி போராட்டத்துக்கு உரம் சேர்த்து வாழ்ந்து கொண்டிருக்கும்—

எமது மக்கள் இக்காலத்தில் இராணுவப்பிரதேசத்தை அண்டியுள்ள தமது வாழ்விடங்களைப் பார்ப்பதற்கும் இராணுவ- கடற்படைமுகாம்களை அண்டியுள்ள கடற்பிரதேசங்களில் மீன்பிடிக்க விரும்புவதும் இயல்பானது என்பதை நாம் அறிவோம்.

**நடமாடத் தடை**

ஆனால் போர் இடைநிறுத்த பிரகடனத்தில்— நடைமுறை விதிகளின் இரண்டாவது சரத்தில் உள்ள படையினரும் விடுதலைப்புலிகளும் தமக்கு மத்தியில் 600 மீற்றர் இடைவெளியில் தற்போதுள்ள நிலைகளில் தரித்திருப்பர் என்பதுடன் அந்த இடைவெளியில் எவரும் நடமாடுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

இத்தடை செய்யப்பட்ட பிரதேசத்தில் அத்துமீறி பிரவேசிப்பது கூட போர் நடவடிக்கையாகக் கருதப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**கண்ணிவெடிகள் பொறிவெடிகள்**

இதன்படி—

விடுதலைப் புலிகளாகிய நாம் இந்த நடைமுறை விதிகளைக் கடைப்பிடிப்பதில் கவனமாகச் செயற்பட்டு வருகிறோம். மேலும் இப் பிரதேசத்தில் இரு பகுதியினராலும் கண்ணிவெடிகள், பொறி வெடிகள் என்பன ஏற்கனவே புதைக்கப்பட்டு அகற்றப்படாமல் உள்ளன.

இந்நிலையில் இராணுவ கடற்படை முகாம்களை அண்டியுள்ள இத் தடை செய்யப்பட்ட 600 மீற்றர் பிரதேசத்துக்குள் எமது மக்கள் சிலர் மீறிப் பிரவேசித்ததாகவும், தொழில் செய்ய முயன்றதாகவும் ஸ்ரீலங்கா படையினர் சுட்டிக் காட்டியதுடன், அது போர் இடைநிறுத்தத்தை மீறும் செயல் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

**நடமாட வேண்டாம்**

எனவே தற்போது அமுலுக்கு வந்துள்ள போர் இடைநிறுத்தத்தை நேர்மை, நியாயத்துடன் கடைப்பிடித்து தொடர்ந்து பேணுவதற்கு எமக்கு ஒத்துழைப்பதுடன்—

கண்ணி வெடிகள், பொறி வெடிகள், இராணுவ நடவடிக்கைகளினால் ஏற்படுத்தப்படும் காயமடைதலையும், உயிரிழப்புகளையும் தடுக்கு முகமாக இப் பிரதேசத்தினுள் எக் காரணங் கொண்டும் நடமாட வேண்டாம் என பொது மக்களைக் கேட்டுக்கொள்வதுடன், எமது உறுப்பினர்களின் அறிவுறுத்தல் ஆலோசனைகளின்படி செயற்பட்டு உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்,

—இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ஐ)

யாழ். மாநகராட்சி மன்றில்

## 50 தொழில் பயிலுநர்கள் விரைவில் சேர்க்கப்படுவர்

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ். மாநகராட்சி மன்றத்தில் 50 தொழில் பயிலுனர்களை புதிதாக சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது.

தேசிய தொழிற் பயிற்சி அதிகாரசபையின் கீழ் 25 மருந்தாளர்களுக்கும், 25 குடும்பநல சேவையாளர்களுக்கும் யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி பகுதியில் பயிற்சி வழங்குவதற்கு, தேசிய தொழிற் பயிற்சி அதிகார சபையின் தலைவர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் யாழ் மாநகரசபை பயிலுநர்களைத் தெரிவு செய்தற்கான விண்ணப்பங்களை விரைவில் கோருமென்று தெரிவிக்கப்பட்டது. (ஒ 4)

திறமைச் சித்திக்காக

## விடைத்தாளுடன் ரூ.1,000 இணைத்த பரீட்சார்த்தி!

கொழும்பு, ஜன. 10

அண்மையில் நடைபெற்ற ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் கணித பாடத்தில் திறமைச் சித்திபெறுவதற்காக ஒரு பரீட்சார்த்தி தனது விடைத்தாளுடன் ஆயிரம் ரூபா நோட்டை இணைத்திருந்தாராம்.

சிலாபத்திலுள்ள கார்மேல் மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள விடைத்தாள் திருத்தும் நிலையத்தில் இது கண்டுபிடிக்கப்பட்டது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

இந்த நிலயத்தில் விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபட்டிருந்த ஆசிரியர் ஒருவர் விடைத்தாளுடன் ஆயிரம் ரூபா நோட்டு இணைக்கப்பட்டிருந்ததை அவதானித்தார்.

விடைத்தாளுடன் இணைக்கப்பட்டிருந்த ஒரு குறிப்பில் ''உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும் எனக்குத் திறமைச் சித்தியை அளியுங்கள்'' என எழுதப்பட்டிருந்தது.

இதுபற்றி விடைத்தாள் திருத்தும் நிலைய அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டது. அவர் மேல் நடவடிக்கைக்காக அப்பண நோட்டையும் அதுபற்றிய விபரங்களையும் பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பியுள்ளார்.

இதில் உள்ள வேடிக்கை என்னவென்றால் பணம் இணைக்கப்பட்டிருந்த விடைத்தாள் திருத்தப்பட்டபோது, திறமைச் சித்திக்குத் தேவையான புள்ளிகளை அந்தப் பரீட்சார்த்தி பெற்றிருந்தது தான். (இ-10)

## ஆலயங்களில்

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி உற்சவ நிகழ்ச்சிகள் 12ஆம் திகதி வியாழக்கிழமை காலை4 - 30 மணி முதல் நடைபெறும்.

இந்நிகழ்ச்சிகளில் காலையில் விசேட உருத்திரா அபிஷேகம், மூலவருக்கு ஸ்நபனா அபிஷேகம் ஆகியனவும் மாலையில் வசந்தமண்டபப் பூஜையும் இடம் பெறும்.

இரவில் விசேட சொற்பொழிவுகள், பஜனை, கூட்டுப் பிரார்த்தனை ஆகியன நடைபெறும். (க)

## பங்குச் சந்தையில் நடவடிக்கை மும்முரம்

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர் இடை நிறுத்த உடன்பாடு ஏற்பட்டிருப்பதை அடுத்து கொழும்பு பங்குச் சந்தையில் பங்குகளின் விலை தொடர்ந்து கணிசமாக அதிகரித்து வருவதாக கொழும்புப் பத்திரிகைகள் செய்திகள் தெரிவித்துள்ளன. [உ]

## நெடுந்தீவு வாசி விடுதலை

யாழ்ப்பாணம், ஜன. 10

1978 அவ்ரோ விமானத் தகர்ப்புச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தில் கைதாகியிருந்த நெடுந்தீவு வாசி ஒருவர் விடுதலை செய்யப்பட்டார்.

இ. மருதலிங்கம் என்ற இந்த இளைஞர் கடந்த ஆண்டு நடுப்பகுதியில் கொழும்பில் கைதாகி இருந்தார்.

விசாரணையின் பின்னர் கடந்த மாத இறுதியில் அவர் விடுதலை செய்யப்பட்டார். (இ-111)

## நீரிறைக்கும் இயந்திரங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசத்திற்கு 46 நீரிறைக்கும் இயந்திரங்களும், 120 தெளிகருவிகளும் ''மாகோ'' கப்பலில் வந்து சேர்ந்துள்ளன. (க-17)

## அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரிக்கை

கொழும்பு. ஜன. 10

சகல அரசியல் கைதிகளையும் இம்மாத முடிவிற்கு முன்னர் விடுதலை செய்யும் ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணியின் தலைவர் ஆரிய புளேகொட ஜனாதிபதி சந்திரிகாவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். [இ-10]

நகரில் இப்படியும் விஷமிகள்!

## கூட்டோடு மாயமாகும் வீதியோர மரக்கன்றுகள்!

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ். நகரப் பகுதியில் கம்பி கூடு அடைக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வரும் மரக்கன்றுகளை விஷமிகள் இரவில், கூட்டோடு அபகரித்துக் சென்று விடுகின்றனர்.

அண்மையில் பருத்தித்துறைவீதி, ஸ்ரான்லி வீதி ஆகிய பகுதிகளில் நடப்பட்டிருந்த கன்றுகள் அவ்வாறு மாயமாகிவிட்டன.

மாநகர சபையினர் இந்தச் செயல் குறித்து கண்டித்துள்ளதுடன் விசனமும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மாநகரசபைப் பகுதியில்— பிரதான வீதி ஓரங்களில்— மகோகனி மரக்கன்றுகளை மாநகரசபையினர் நட்டு வருகின்றனர். [ஒ-17]

# சனிக்கிழமை நள்ளிரவுக்கு பின்னர் கிழக்கில் பூரண அமைதி நிலவுகிறது
## சுற்றிவளைப்புகளும், சோதனைகளும் இல்லை

கொழும்பு, ஜன. 10

போர் இடை நிறுத்தம் கடந்த சனிக்கிழமை நள்ளிரவுக்கு பின் அமுலான பின்னர் கிழக்கு மாகாணத்தில் பூரண அமைதி நிலவுவதாக கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்துள்ளன.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் துப்பாக்கிச் சத்தங்களே கேட்கவில்லை என்றும்—

தடைமுகாம்களில் சோதனைகள் தணிந்துள்ளதாகவும்—

அம்மாவட்டங்களில் சுற்றிவளைப்புக்கள் இடம்பெறவில்லை என்றும்— தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - வவுனியா தாண்டிக்குளத்திலும் சோதனைகளில் தளர்வு இருந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-3)

## அதிரடிப் பொலீஸார் முகாமில் முடக்கம்!

கொழும்பு, ஜன. 10

போர் இடைநிறுத்தம் அமுலானதன் பின்னர் அம்பாறை மாவட்டத்தில் அதிரடிப்படை பொலீஸார் முகாம்களுக்குள் முடங்கியுள்ளனர் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் இதுவரை காலமும் வீதிச் சோதனைகள், சுற்றிவளைப்புகள் ஆகியவற்றில் அதிரடிப் படைப் பொலீஸாரே ஈடுபட்டுவந்தனர்.

நேற்று முன்தினம் முதல் வீதிப் போக்குவரத்து மற்றும் வீதிச் சோதனைச் சாவடிகளில் பொலீஸார் பணியாற்றியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## அடுத்த சில தினங்களில் அமைச்சரவை மாற்றம்
### எண்ணிக்கை உயரலாம்

கொழும்பு, ஜன 10

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தமது அமைச்சரவையை எதிர்வரும் வெள்ளிக்கிழமை அளவில் மாற்றியமைக்கவிருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் நாடாளுமன்ற கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போது தாம் வெளியிட்ட அரசின் கொள்கை விளக்க பிரகடனத்தில் இடம் பெற்றுள்ள அம்சங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் —

தற்போது ஏற்பட்டு வரும் மாற்றங்களை கருத்தில் கொண்டு செயல்படுவதற்கும் வசதியாக அமைச்சரவையை மறுசீரமைக்க ஜனாதிபதி முடிவு செய்திருக்கிறார் எனத் தெரிய வருகிறது.

உத்தேச மாற்றத்தின் போது அமைச்சர்களின் எண்ணிக்கை தற்போதைய எண்ணிக்கையை விட இரண்டால் அதிகமாகும் என்பதும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-5)

## கல்வித்துறைக்கு பட்ஜட்டில் அதிக நிதி
### அமைச்சர் பீரிஸ் தகவல்

கொழும்பு, ஜன. 10

புதிய வரவு செலவுத்திட்டத்தில் கல்வித்துறைக்கு அதிக நிதியை ஒதுக்கீடு செய்ய அரசு முடிவு செய்திருப்பதாக நீதி, அரசமைப்பு விவகார அமைச்சரும், பிரதி நிதியமைச்சருமான பேராசிரியர் ஜி. எல் பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

மொத்த செலவினத்தில் நான்கு வீதமாக இருந்த கல்வித்துறை நிதி ஒதுக்கீட்டை முன்னைய அரசு 2 வீதமாக — அரைவாசியாக குறைத்தது.

ஆனால் புதிய அரசு மீண்டும் அதிக நிதியை கல்வி மற்றும் கல்வி விதான செலவுக்கு ஒதுக்க முடிவு செய்துள்ளது என்றார் அமைச்சர்.

பெப்ரவரி மாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் இவ்வாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் ஆயிரத்து 240 கோடி ரூபா துண்டு விழும் தொகையாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## புலிகளின் குரல் வானொலியில்

**10 — 01 — 1995**

**செவ்வாய் இரவு**

★ 08-01—சிறப்பு நிகழ்ச்சி —நெடுஞ்செழியன் எழுதிய ''தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை''
★ 8-20 — ஏர்முனை — ''உருளைக்கிழங்கின் உச்சவிளைச்சல்'' சித்திரம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — அறிந்து கொள்ளுங்கள்—தகவற் களஞ்சியம்
★ 8-50 — மலரும் மொட்டுக்கள்
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

**11 — 01 — 1995**

**புதன் காலை**

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 —மணியாரம்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தாயகப்பாடல்கள்
★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## தமிழீழ வானொலி

**செவ்வாய் மாலை ஒலிபரப்பு**

★ 5 01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக்கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — தமிழிசை
★ 5-30 — வானொலி மதியூகம் — 2
★ 6-00 — சிந்தனைக்குச் சிலவினாடிகள்
★ 6-02 —இவ்வாரம் இவர் —விளையாட்டு வீரர் திரு. சண்முகலிங்கத்துடன் சென்றி
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 — என் தெரிவு

# தமிழர் விருந்தோம்பல் பண்பு குறித்து
# தஞ்சை மாநாடு எழுப்பும் கேள்வி!

எட்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சிமாநாடு இம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஐந்தாம் திகதி வரை தமிழ் நாடு, தஞ்சாவூரில் நடைபெற்றது.

அம் மாநாட்டுக்குச் சென்ற ஈழத்துத் தமிழறிஞர்கள் வெளியேற்றப்பட்ட விவகாரம் பெரும் சர்ச்சைக்குரிய விடயமாகிவிட்டது.

அந்தப் பின்னணியில், 1974 ஜனவரி பத்தாம் நாள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டினை இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் நினைவு கூர்ந்து பார்க்கிறார் கட்டுரையாளர்.

இலங்கைத் தமிழ் அறிஞர்கள் இந்தியாவின் தமிழ் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட விவகாரம் 1974 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களால் ஏகோபித்து நடத்தப்பட்ட அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை பல்வேறு கோணங்களிலும் நினைவு கூரச் செய்கிறது.

பாரிஸ் மாநகரில் கூடிய மூன்றாம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் முடிவின்படி நான்காவது மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கான ஒழுங்குகளை அதன் இலங்கைக் கிளை கவனிக்கத் தலைப்பட்ட வேளையில் கிளையில் பெரும் பூகம்பமே வெடித்திருந்தது.

தமிழ் மக்களின் அபிலாசைகளைத் தானும் கேட்டறியாதும், அவற்றுக்கு குந்தகமாகவும் 1972 குடியரசு அரசமைப்பை அரங்கேற்றியிருந்த அப்போதைய பிரதமர் ஸ்ரீமாவோவையே மேற்படி மாநாட்டைத் திறந்து வைக்கும்படி அழைத்து அவருக்கு முகஸ்துதி செய்வதற்கு மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறுவது வாய்ப்பாக அமையாது எனும் ஒரே காரணத்தின் நிமித்தம், மாநாட்டையே கொழும்பில் பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்துக்கு மாற்றுவதற்கு ஒரு சாரார் துடிதுடித்து நின்றார்கள்.

**பகிஷ்கரிப்பு**

ஆயினும் பெரும்பாலான உறுப்பினர்கள் மேற்படி மாநாட்டை யாழ்ப்பாணத்திலேயே நடத்துவது என்ற முடிவில் உறுதியாக நின்றமையால், மாநாடு இங்கேயே நடைபெற்ற போது சிறு கோஷ்டியினர் அதனைப் பகிஷ்கரித்தனர்.

ஈழத்துத் தமிழ் அறிஞர்கள் இம்முறை தமிழக மாநாட்டில் கலந்து கொள்ள முடியாமல் திருப்பி அனுப்பட்டதால் உண்டான பரபரப்புப் போன்று 1974 யாழ்ப்பாண மாநாட்டிலும் பரபரப்பானதோர் சம்பவம் நிகழ்ந்தது.

மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிய வெளிநாட்டு அறிஞர் பலர் விமான நிலையத்தில் வைத்தே நாடு கடத்தப்பட்டனர். அப்படி நாடு கடத்தப்பட்டவர்களுள் வெளி நாடுகளில் இருந்து மேற்படி மாநாட்டிற் கலந்து கொள்ளும் பொருட்டு தாயகம் திரும்பியிருந்த இலங்கைத் தமிழாராய்ச்சியாளரும் இருக்கவே செய்தனர்.

**தமிழ் இளைஞர் சாதனை**

ஆயினும் அம் மாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு திருச்சியில் இருந்தோ, சென்னையில் இருந்தோ விமான மூலம் வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்ட 'விருந்தாளி'யான தமிழபிமானங் கொண்ட தமிழகத்து இளைஞர் ஒருவர் மட்டும் ஸ்ரீலங்கா பொலீஸாரின் கண்களுக்கு மண்ணைத் தூவி விட்டு யாழ் நகர் வந்து சேர்ந்து விட்டார்.

இது வடபகுதித் தமிழ் இளைஞர்கள் கட்டுக்கோப்பாக இயங்கிச் செயற்படுத்திய சாதனையாகும்.

## 1974 மாநாட்டில் விருந்தாளிக்கு யாழ். இளைஞர் வழங்கிய பாதுகாப்பு

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10ஆம் நாள் யாழ். வரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற படுகொலையின் போது அந்தத் தமிழகத்து இளைஞரும் அவையினர் மத்தியில் காணப்பட்டார்.

இவரைக் குறிவைத்தே ஸ்ரீலங்கா காவல்துறையினர் தேடுதல் வேட்டையில் இறங்கினார்கள்.

இதைத் தமிழ் இளைஞர்கள் உணர்ந்து கொண்டனர். தமிழ் மக்களின் விருந்தோம்பல் பண்புக்குக் குந்தகம் ஏற்படாது தமது விருந்தினருக்குத் தகுந்த பாதுகாப்பை நல்கத் தலைப்பட்டனர். பல்வேறு யுக்திகளைப் பாவித்து அவரைப் பாதுகாப்பாகத் தமிழ் நாட்டுக்கு அனுப்பியும் வைத்தனர்.

இந் நிகழ்வோடு தஞ்சை மாநாட்டுச் சம்பவத்தை ஒப்பிட்டுப் பார்க்கும் போது எத்தனையோ கேள்விகள் எழுகின்றன.

—தமிழ் நாட்டுத் தமிழர் தமது விருந்தோம்பல் பண்பைத் துறந்து விட்டார்களா?

—இலங்கையில் தமிழ் மக்களுக்கு இன்னல் நேரிடின் தமிழ் நாட்டுத்தமிழர் தாமாக ஆடாவிடினும் கூட அவர்கள் ''தசை'' ஆடும் என்று அண்ணா கூறிய வாக்குப் பொய்த்து விட்டதா?

ஜெயலலிதாவின் காவல் துறையினரின் கெடுபிடிகளில் இருந்து தமது விருந்தினர்களுக்குப் பாதுகாப்புத் தந்து முறையாக வழியனுப்பி வைக்க இயலாத அளவுக்கு அங்குள்ள தமிழ் மக்கள் கையாலாகாதவர்கள் ஆகிவிட்டார்களா?

காரியம் நடந்து முடிந்த பின்பு தமிழகத்தில் வழமையாகத் தெரிவிக்கப்படும் கண்டன வார்த்தைகளுக்குத் தான் என்ன அர்த்தமோ!

ஆனால் —

மத்திய அரசாங்கத்துடன் சேர்ந்து கொண்டு ஜெயலலிதா அரசாங்கம் தமிழர்களின் விருந்தோம்பல் பண்பை, தமிழக மக்களுக்குத் தெரியாமலே கெடுத்திருக்கிறார்கள் என்ற கருத்தையும் கவனிக்காமல் இருக்க முடியாது.

மாநாடு தொடங்குவதற்கு ஒரு சில மணி நேரத்துக்கு முன்னர் ''வெளியேற்ற நாடகம்'' நடந்த பின்னரே தமிழக மக்களுக்கு இது குறித்துத் தெரியும். முன்னேற்பாடாகத் தெரியாது —

ஈழத் தமிழ் அறிஞர்கள் வெளியேற்றப்பட்டதை அறிந்து அங்குள்ள தமிழறிஞர்களும், மாணவர்களும் கவலை தெரிவித்தனர் என்பதனையும் சிலர் சுட்டிக்காட்டாமல் இல்லை.

**இன்பரசு**

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள மூன்று சிங்கர் லேடீஸ் தையல் மெஷின்கள், புதிய Portable English Typewriter (சுவிஸ்), வீட்டுப் பாவனைக்குரிய தேக்கு அலுமாரிகள், Belling Cooker புதியது விற்பனைக்குண்டு. A. S. பொன்னம்பலம், காங்கேசன்துறை றோட், இணுவில்.
(35621)

### தேவை

உடுவிலில் இயங்கிக்கொண்டிருக்கும் காமன்ஸுக்கு சேட் தைப்பதில் அனுபவமுள்ள பெண்கள் தேவை பீஸ் கணக்காகவும் வேதனம் வழங்கப்படும். தொடர்பு: சி. றஞ்சன், 'செல்வவாசா', பெண்கள் பாடசாலை மேற்கு வீதி, உடுவில்.
(34619)

### பணிப்பெண் தேவை

வயது முதிர்ந்த தம்பதிகளின் தேவைகளைக் கவனிக்க சுறுசுறுப்பான, நேர்மையான பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்க்கலாம். தொடர்பு: வ. குலசிங்கம், அச்சக லேன், ஸ்ரேசன் றோட் சந்தி, கொக்குவில்.
[34624]

### தவறிவிட்டது

கடந்த 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை நாவற்குழியில் இருந்து மறவன்புலோவுக்குச் செல்லும் வழியில் எனது இரண்டு பவுண் சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். பஞ்சலிங்கம் புவனேஸ்வரி, மறவன்புலோ.
(34620)

### நாய்க்குட்டிகள்

நல்லின அல்சேஷன் ஒன்றரை மாத நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. சந்திக்கும் நேரம் பிற்பகல் 2-00—4-00 மணிவரை S S தம்பி (செல்வம்), கூளாவடி ஒழுங்கை, ஆனைக்கோட்டை.
(சி-131)

### இலகு திருமண சேவை

31 வயது, பூராடம், செவ்வாயற்ற U. K. இல் வசதியாகவுள்ள மணமகனுக்கு U. K. மணமகள் அல்லது இங்கிருந்து செல்லக்கூடிய அழகிய மணப்பெண் தேவை. தொடர்பு: ஞாயிறு காலை. து. விமலா, யாழ். நாச்சிமார், கோயிலடி.
[34553]

### வெளிவந்துவிட்டன!

மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் புதிய பாடத் திட்டத்திற்கமைய உருவாக்கப் பெற்ற பாலர் கணிதம், சிறுவர் கணிதம், சுற்றாடற் கல்வி, தமிழ் செயல் நூல்கள் வெளிவந்துவிட்டன. ஆக்கம்: இலக்கிய வித்தகர் த. துரைசிங்கம். விற்பனையாளர் பூபாலசிங்கம் பொத்தகக் களஞ்சியம், யாழ்ப்பாணம்.
(34587)

### ரி. வி., டெக் திருத்துநர்

சகல றேடியோக்கள் ரி வி. டெக் எல்லா விதமான மணிக்கூடுகளையும் பழுது பார்த்துக்கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம்சந்தி], யாழ்ப்பாணம். கிளைகள்: கண்டி வீதி, சாவகச்சேரி. மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை
[சி-254]

### ஆண்டு - 5

Brightஇன் மாணவர்களுக்கான விஜயராணி சற்குணராசா B. A. (Hons) S. பாஸ்கரன் B.Sc.(Hons) எழுதிய கணிதம் 60/-. தமிழ் 50/-. கட்டுரைமஞ்சரி 50/-. பூபாலசிங்கம் புத்தகசாலை மற்றும் பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.
(34562)

### சங்கீதம் வினா-விடை

வட இலங்கை சங்கீத சபை நடத்தும் தரம் 2, 3 பரீட்சைகளுக்கு தோற்றுவோருக்கும் ஆண்டு 6—11 வரை சங்கீதம் கற்போருக்கும் பயன் தரும் சங்கீதம் வினா–விடை நூல் விற்பனையாகிறது. ஆக்கம்: செல்வி ''அநேகா'' விற்பனை: ஸ்ரீ சுப்பிரமணிய பொத்தகக் களஞ்சியம், பூபாலசிங்கம் பொத்தகக் களஞ்சியம், யாழ்ப்பாணம்.
(34586)


### அப்பியாசக்கொப்பி

பாடசாலை மாணவர்களுக்காக அப்பியாசக் கொப்பிகளும், ஆண்டு 1 தொடக்கம் உயர்கல்வி வரையிலான பாடப்புத்தகங்களும் மலிவு விலையில் விநியோகிக்கப்படுகின்றன. நேர அட்டவணை, கலண்டர்களும் இலவசம். அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி [வெலிங்டன் சந்திக்கு அருகில்], யாழ்ப்பாணம்.
[சி-255]

### ஓடர்கள் கவனிக்கப்படும்

சிறுவர் பெரியோர்களுக்கான றெடிமேட் ஆடைகள் மற்றும் சாறி பிளவுஸ், ஆண்களுக்கான ரவுஸர் ஷேர்ட் பெண்களுக்கான பாட்டி பிறக் ஆகியவற்றை குறித்த தவணையில் தைத்து பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு சலுகை விலைகள் தொடர்பு: சிற்றி காமன்ஸ், பலாலி வீதி, திருநெல்வேலி. கிளை: சிவபதி, இணுவில்.
[சி-74]

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் செல்லையா சுப்பிரமணியம்**
(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)

மலர்வு: 03 — 03 — 1928
உதிர்வு: 02 — 01 — 1993

திதி: 10 — 01 — 1995

அன்புக்கோர் இலக்கணமாய்
பண்புக்கோர் வழிகாட்டியாய்
பாசமதின் பிறப்பிடமாய் வாழ்ந்த எம் தெய்வமே!
நேசம் காட்டி நீங்கள் வளர்த்த ஐந் மலர்கள்
காயாகி கனியாகு முன் — எமைப்
பிரிந்து ஆண்டு இரண்டல்ல — ஆயிரமானாலும்
உயிர் உள்ளவரை உங்கள் நினைவு இருக்கும்.
உங்கள் ஆத்மா சாந்தியடைவதாக!

உங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்,

கண்டி வீதி,
கொடிகாமம்.
(34593)

## மாவட்ட பொது நிர்வாக சபைக் கூட்டம்

காலம்: 11 - 01 - 1995 புதன் பி.ப. 4 00மணி
இடம்: புதிய விஞ்ஞானக் கழகம்
(எழிலகம் முன்பாக)
யாழ்ப்பாணம்.

தங்கள் கோட்ட நிர்வாகசபை உறுப்பினர்கள் ஏழு பேரும் இக் கூட்டத்திற்கு தவறாது சமுகம் தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தலைவர்,
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம்.
(சி/269)

## பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோயில் மார்கழி மாத

# ★ 7-ம் திருவிழா விஞ்ஞாபனம் ★

ஈழ அன்னை முகத்திருக்கும் இணையில்லாக் கண்ணாகும்
இது கண்ணனவன் வாழ்கின்ற கண்ணின் மணி மண்ணாகும்
நல்ல மண்ணுமவன் வாழ்வதால் மகிமையுள்ள பொன்னாகும்
பொன்னாலை பொன் ஒளியால் புகழ் பூத்த ஊராகும்
ஊர்வாழும் உத்தமனே உலகாளும் மாயவனாம்
மாயோனை நினைத்திடவே மனத்துயரம் ஓடிவிடும்
இது ஓடி நாம் கோயில் வரக் கோடியின்பம் தேடிவரும்
கண்ணாளன் கண்ணனின் பொன்னாலைக் கோயில்.

ஆக்கியோன்: மூளாயூர் ஆசுகவி, சிவசுப்பிரமணியம்
(34506)

தாழாது எமை வளர்த்த......
தந்தை மலர்ப் பொன்னடியில்

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலிப் பூக்கள்



இன்பர்: 16 — 05 — 1951
உம்பர்: 02 — 01 — 1993

அமரர்
**சதாசிவம் பாலசுப்பிரமணியம்**
**(துரை)**
(சரஸ்வதி வெதுப்பக உரிமையாளர்)

திதி: 10 — 01 — 1995

துரையே தூயவனே தூண்டா மணி விளக்கே!
விரைவாய்ச் சென்றிட்ட கொடுமையென்ன –
கரையறிவார்
கடலால் கிளாலியிலே காடையர் செய் –
கொடுமையினால்
நடந்தாயோ நம்மை விட்டு நீ?

நினைவில் மாறாத நெக்குருகும் அஞ்சலிகள்;
மனைவி, பிள்ளைகள்.

சரஸ்வதி வெதுப்பகம்,
பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்,
10 - 01 - 1995
[34594]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பிறப்பு: 14 — 02 — 1937
இறப்பு: 11 — 12 — 1994

**திருமதி அருளம்பலம் புஷ்பதேவி**

அன்னையவள் அரவணைப்பில்
அக மகிழ்ந்து இருந்த நாம்
அண்ணன்மாரின் வருகையினை
ஆவலுடன் எதிர்பார்த்திருந்த வேளை
ஆண்டவன் அன்னையை
அரவணைத்துக் கொண்டார்
அந்தோ விதியை
ஆரறிந்து கொண்டார்
அம்மாவை இழந்து
அல்லற் பட்டவேளை
அன்பும் ஆதரவும் காட்டி
கருமங்கள் நிறைவேற
கைகொடுத்து உதவியளித்த
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு
உளமார்ந்த நன்றிகளை
தெரிவித்துக் கொள்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல.: 23, 3ஆம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை.
[34589]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 08 — 12 — 1924
மறைவு: 11 — 12 — 1994

**அமரர் சிவசம்பு தம்பித்துரை**

அன்பால், அறிவால், பண்பால் எங்களை
எல்லாம் வழிநடத்தி வாழ வைத்த
எங்கள் அன்புத் தெய்வத்தின்
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்;

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

[illegible]
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.
(8186)

அளவெட்டி – நாகேஸ்வரம்
சிறீ நாகவரத நாராயணர் தேவஸ்தான

## சுவர்க்க வாசல் வைகுந்த ஏகாதசி விழா

12-01-95 வியாழன் காலை 9 மணி தொடக்கம்

காலை 10 மணி தீர்த்த உற்சவம்.
மாலை 6மணி அர்ச்சனைகள், பூசை.
இரவு 9 மணி தொடக்கம் சிறீ ரங்க நாதருக்கு 1008 வலம்புரிச்சங்கு பால் அபிஷேகம்.

இரவு 12-33 மணி சுவர்க்கவாசல் தரிசனம்

இசைக்கச்சேரி, சமய உரை என்பனவும் இடம்பெறும்.

– தேவஸ்தான பரிபாலன சபை.
(சி-272)

## நன்றி

சேரன் நிறுவனத்தின் கீழ் இயங்கும் யாழ்ப்பாணம், ''எழினி புடைவை வாணிபர்'' ஸ்தாபனத்தில் 29 - 12 - 94 அன்று என்னால் தவறவிடப்பட்ட பெறுமதிமிக்க நகைகளை எடுத்து என்னிடம் சரியாக ஒப்படைத்த மேற்படி ஸ்தாபன ஊழியர்களின் நேர்மையைப் பாராட்டுவதுடன் அவற்றைத் திரும்பப் பெற உதவிய வருவாய்ப் பகுதிச் செயலக பொறுப்பாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—நகை உரிமையாளர்
[34623]

## 4-ம் ஆண்டு நினைவு நாள்



செல்வன்
**அப்பாப்பிள்ளை துஷ்யந்தகுமார்**
**(சின்னக் கண்ணா)**

மண்ணில்: 02 — 04 — 1984
விண்ணில்: 09 — 01 — 1991

கண்ணான கண்மணியே எமதருமைச் சின்னக்கண்ணா
விண்ணான மணியாகி ஒளிர்கின்ற காட்சியினை
எண்ணாத நாளில்லை உனையெண்ணி நாமிங்கே
கண்ணாலே நீர் வடிய உனையெங்கே காண்போமினி.

பிரிவால் வாடும்;
அம்மா, அப்பா,
அண்ணாமார், அக்காமார்,
அண்ணிமார், அன்ரிமார்,
மாமன்மார், அத்தைமார்,
பேரன், பேர்த்தி.

செ. அப்பாப்பிள்ளை,
மூன்றாம் ஒழுங்கை,
83/3, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
[34622]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 13 — 11 — 1914
மறைவு: 12 — 12 — 1994

அமரர்
**தில்லைநடராசா நாகரத்தினம்**

அன்பின் சிகரமே! பண்பின் உறைவிடமே! அணையாத் தீபமே! எங்கள் உயிர்த்துடிப்பே! இம் மண்ணும் விண்ணும் – உள்ளவரை எமக்காக நீங்கள் வாழ்ந்தது போல் உங்கள் நினைவைச் சுமந்து எங்கள் உயிர் உள்ளவரை உமக்காகவே வாழ்வோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
மக்கள், மருமகன், பேரப்பிள்ளைகள்.

''வெல்லிக்கந்தோட்டம்'',
துன்னாலை தெற்கு.
கரவெட்டி.
(34592)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## பாதை திறப்பு; மீளக்குடியமர்வு

எதிர்பார்க்கப்பட்டது போலவே அரசாங்கப்படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் இடைநிறுத்தம், அசம்பாவிதம் எதுவும் இன்றி இரண்டு நாள்களைக் கடந்து விட்டது. வடக்கு - கிழக்கில் தொடர்ந்து அமைதி நிலவும் என்றும், போர் இடைநிறுத்தம் நீடிக்கப்படும் என்றும், அது நிரந்தர போர் நிறுத்தமாக மாறும் என்றும் நம்பப்படுகிறது: எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ் மக்களின் அடுத்த உடனடித் தேவை யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான போக்குவரத்துப் பாதையாகும். மனப்பயம் இன்றி மக்கள் தமது பயணங்களை மேற்கொள்ளவும், பொருள்களை எடுத்துவரவும், விளை பொருள்களை வெளியே எடுத்துச் செல்லவும் பாதுகாப்பான பாதை ஒன்று அத்தியாவசியமான தேவை.

வடக்கு மக்கள் இப்போது உணவுப் பொருள்களுக்கும், மருந்து வகைகள் போன்ற அத்தியாவசிய பாவனைப் பொருள்களுக்கும் கொழும்பு விலைகளைவிட இரண்டு மூன்று மடங்கு கொடுக்க வேண்டியுள்ளது.

பாதுகாப்பான பாதை ஒன்று திறக்கப்பட்டால், இந்த நிலைமை மாறும். பொருள்கள் தாராளமாகக் கிடைக்கத் தொடங்கியதும் விலை வீழ்ச்சி தானாகவே உண்டாகிவிடும். விளை பொருள்கள் மற்றும் கடலுணவுகளை வெளிமாவட்டங்களுக்கு எடுத்துச் சென்று மக்கள் தமது வருவாயையும் பெருக்கிக்கொள்ளலாம். அதாவது பொருளாதார வளர்ச்சியிலும், உற்பத்தித் துறையிலும் இயல்பு நிலை உண்டாகும்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தையின் போது, குடாநாட்டுக்கான போக்குவரத்துப் பாதையைத் திறப்பது குறித்தே முக்கியமாக ஆராயப்படும் என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.

போர் இடைநிறுத்தம் நடைமுறையில் உள்ளதால் மக்கள் போக்குவரத்துக்குப் பூநகரியையும், பொருள்களை எடுத்து வருவதற்கு ஆனையிறவையும் திறந்து விடுவது குறித்து அரசு ஆராய்கிறதாம்.

முதலில் பூநகரியைத் திறந்துவிட்டாலே மக்களின் அன்றாடப் பிரச்சினைகளில் பலவும் நீங்கிவிடும். அத்தோடு நிற்காமல் பொருள்களைக் கொண்டு வருவதற்கு வவுனியா, தாண்டிக்குளத்தில் நடத்தப்படும் சோதனைகள் தளர்த்தப்படவேண்டும்; சோதனையின் போதான கெடுபிடிகளும் நிறுத்தப்படவேண்டும்.

போர் இடைநிறுத்தம் நிரந்தர போர் நிறுத்தமாகினால், தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கையில் இயல்பு நிலையை உருவாக்குவதனை மேலும் விரைவுபடுத்த அதிக வாய்ப்பு உண்டு.

இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்தக் கிராமங்களுக்குச் சென்று மீளக் குடியமர்வதற்கு வகை செய்யப்பட வேண்டியதும் மிகப் பிரதான அம்சமாகும். இடம்பெயர்ந்து தமது உறவினர்களுடனும், அகதி முகாம்களிலும் வாழும் மக்கள் தமது சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பிச் சென்றதன் பின்னரே குடா நாட்டு மக்களின் வாழ்க்கை இயல்பு நிலை முழுமையாக திரும்பியதாக ஒட்டு மொத்தமாகக் கொள்ளலாம்.

எனவே போக்குவரத்துப் பாதை விவகாரத்துக்குத் தீர்வு காணப்பட்டதும், அரசும் விடுதலைப் புலிகளும் தமது சமாதானப் பேச்சில் முக்கியமாக ஆராய வேண்டியது இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவது குறித்ததாகவே இருக்க வேண்டும்.

வடபகுதியை அபிவிருத்தி செய்வதற்கு 4,000 கோடி ரூபா ஒதுக்கியுள்ளோம்; அதனால் புனர்நிர்மாண, புனர்வாழ்வுப் பணிகளைத் தொடங்கப் போகிறோம் என்று கூறும் அரசு, இடம் பெயர்ந்தோரை மீளக்குடியமர்த்தும் விடயத்தைப் பின்னுக்குத் தள்ள நினைக்க கூடாது.

## விவசாய ஆசிரியர் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன. 10

விவசாய பயிலுநர் ஆசிரிகளையும், விவசாய டிப்ளோமா ஆசிரியர்களையும் ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை எதிர்வரும் 14ஆம்தி. தி யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் நாளை அனுப்பி வைக்கப்படும் என்றும் பரீட்சை ஆணையாளர் யாழ் கல்வித் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளார். (ஐ)

## திணைக்கள தலைவர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல திணைக்களங்களின் தலைவர்களுக்குமான விசேட கலந்துரையாடல் இன்று முற்பகல் 10 மணிக்கு சுண்டிக் குளியில்உள்ள தமிழீழ அரசியல்துறை நடுவப்பணியகத்தில் நடைபெறவுள்ளது. சகலதிணைக்களத் தலைவர்களையும்அதில் கலந்துகொள்ளுமாறு தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (ஐ)

## புங்குடுதீவு பெண் மாஸ்கோவில் மரணம்

சுவிற்சர்லாந்தில் உள்ள தனது கணவரிடம் சென்ற குடும்பப் பெண் ஒருவர் வழியில் மாஸ்கோ விமான நிலையத்தில் தரித்து நின்ற சமயம் மாரடைப்பால் மரணமானார் எனத் தெரியவந்துள்ளது.

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி நாகம்மா (வயது 44) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவரை வழியனுப்பி விட்டு தொலைபேசித்தொடர்பை எதிர்பார்த்து கொழும்பில் காத்திருந்தஉறவினருக்கு அவரதுமரணச்செய்தியேகிடைத்ததாகவும் தெரியவந்தது. (ஐ-117)

# புனரமைப்புக்கு உதவியாக இழப்பு விவரங்களுடன் நூல்

## பிரதேச ரீதியாக வெளியிடப்படும் என்கிறார் அரசஅதிபர்

வடமராட்சி, ஜன. 9

யாழ். மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள அழிவுகள், சேதங்கள், இடம் பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள், வீதிகள், மலகூட வசதிகள், குடிதண்ணீர் போன்ற பல்வேறு பிரச்சினைகள் அடங்கிய புத்தகங்கள் பிரதேச செயலர் பிரிவு வாரியாக வெளியிடப்படும்.

இவ்விவரங்கள் அடங்கிய புத்தகத்தை அடிப்படையாக வைத்து புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

இவ்வாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற உத்தியோக பூர்வ சந்திப்பின் போது கூறினார்.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் திரு. ஆ. சிவசுவாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ் அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:-

பிரதேச வாரியாக வெளியிடப்படும் இவ்விவரப் புத்தகத்தில் இதுவரை இடம்பெற்ற இழப்புகள் அனைத்தும் பதிவு செய்யப்படும், இதனை வைத்துக் கொண்டு எதிர்காலத்தில் வடக்கு — கிழக்கு மாகாணசபையோ, வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்களோ நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள வசதியாக இருக்கும் — என்றார்.

### தாமதம் நீங்கும்

இடம் பெயர்ந்தோர் நிவாரணம் கடந்த ஒக்ரோபர் மாத முதல் இருவாரங்களும் கடற்றொழிலாளர் நிவாரணம் கடந்த மார்ச் மாதம் வரையுமே வழங்கப்பட்டதாக இங்கு சுட்டிக் காட்டப்பட்டது.

இந் நிவாரணங்களை தாமதமின்றி வழங்க எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும்.

கோமாரி கப்பலில் 560 லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் வந்து சேரவுள்ளன. அவை வந்து சேர்ந்ததும் நிவாரணப் பொருள்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பிரதி மாதம் தோறும் 6 ஆயிரம் மெற்றிக்தொன் உணவுப் பொருள்கள் யாழ். மாவட்டத்துக்கு தேவையாக உள்ளது.

உணவுப் பொருள்கள் கடந்த 1993ஆம் ஆண்டு வந்து சேர்ந்தது. 1994 ஆம் ஆண்டில் பொருள்கள் வந்து சேர்வதில் சிலசில இடைஞ்சல்கள் ஏற்பட்டன.

இவ்வாண்டில் [1995] இடைஞ்சல்கள், கஷ்டங்களை நீக்க திட்டமிட்டுள்ளோம்.

உணவுப் பிரச்சினையை தீர்ப்பதற்கு தனியாக செயலகம் மட்டும் செயல்பட முடியாது.

ஏனெனில் போதிய பயணம் செயலகத்தில் இல்லை. ஆதலால் மக்களுக்கு தேவையான உணவுப் பொருள்கள், அத்தியாவசியப் பொருள்களை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், தனியார் வர்த்தகர்களும் எடுத்து வர வேண்டும்.

இவர்களுக்கெனகுமணகப்பல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. தனியார் வர்த்தகர்களும் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களும் செயலகம் ஊடாக இக்கப்பல் மூலம் பொருள்களை சருவிக்கலாம்.

இக்கப்பலிலும் 3 ஆயிரம் மெ. தொன்னுக்கு மேற்பட்ட பொருள்களை கொண்டு வரலாம். இதற்கு சுமார் 750 லட்சம் ரூபா செலவாகும்.

### மண்ணெண்ணெய்

தற்போது மாதந் தோறும் 7,200 பரல் மண்எண்ணெய் வந்து சேருகின்றது.

இது பங்கீட்டு அடிப்படையில் பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

கடற்றொழிலாளருக்கும் மண்எண்ணெய் வழங்க ஆவன செய்யப்படும். மாவட்டமட்டத்தில் கடற்றொழிலாளர் பற்றிய விவரம் சேகரிக்கப்பட்டதும் இதுபற்றி முடிவெடுக்கப்படும்.

கப்பல்கள் மூலம் கொழும்பிலிருந்து எடுத்து வரப்படும் அத்தியாவசியப் பொருள்களுடன் சுகாதாரம், போதனாவைத்தியசாலை, கல்வி, உயர்கல்வி ஆகிய திணைக்களகங்களுக்கு பொருள்கள் எடுத்து வருவதற்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

### மருந்து தட்டுப்பாடு

குழந்தைகளுக்கான போலியோ தடுப்பு மருந்து பற்றாக்குறை, கட்டாக்காலி நாய்களை கொல்வதற்கான மருந்து என்பனவற்றுக் தட்டுப்பாடு நிலவுவதாகவும், டாக்டர்களுக்கும் இங்குள்ள வைத்தியசாலைகளில் பற்றாக்குறை இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவற்றை நீக்குவது தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சு அதிகாரிகளுடன் பேசி தீர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

விவசாய, நெசவு, தச்சுத் தொழில்களுக்கான உள்ளீடுகள், கட்டுமரத்தைத் தயாரிப்பதற்கான மரங்கள் பெறுவது என்பன பற்றி செயலகத்தில் அடுத்து நடக்கும் மாவட்ட மட்டத்திலான கூட்டத்தில் ஆராயப்பட்டு நடவடிக்கைகள் பிரதேச செயலர் ஊடாக அறியத்தரப்படும்.

இப்படி அவர் கூறினார். (இ-173)

## கொழும்பில் சில கடைகள் தீக்கிரை!

கொழும்பு, ஜன. 10

கொழும்பு கிரிபத்கொடையில் நேற்று முன்தினம் கடைகள் சில கொள்ளையிடப்பட்டதாகவும். பின்னர் அக்கடைகள் தீக்கிரையாக்கப்பட்டதாகவும் "திவயின" பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டது. (உ-3)

## கப்பலிலிருந்து பொருள்கள்

வடமராட்சி, ஜன. 10

பருத்தித்துறை துறைமுகத்தில் தற்போதுமாஹோ, ஹபரண ஆகிய இரு கப்பல்களிலிருந்தும் பொருள்கள் இறக்கப்பட்டு வருகின்றன. (இ-173)

# அழைப்பு இங்கு கிடைத்த பின்பே மாநாட்டுக்காகச் சென்றோம்

## சண்முகதாஸ் தம்பதியினர் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 10

தஞ்சாவூரில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்கான முறையான அழைப்புகள் உலகத் தமிழாராய்ச்சி மன்றத்திடம் இருந்து யாழ்ப்பாணத்தில் கிடைத்ததாகவும் —

அதனைத் தொடர்ந்தே தாம் மாநாட்டுக்கென தமிழ் நாடு சென்றதாகவும்—

பேராசிரியர் அ. சண்முகதாஸும் அவரது துணைவியார் மனோன்மணி சண்முகதாஸும் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெளிவுபடுத்தி உள்ளனர்.

இவர்கள் மாநாட்டில் பங்குபற்ற முடியாமல் வெளியேற்றப்பட்டது தொடர்பாக கொழும்புத் தகவல் நிறுவனங்களும், ஏனைய பிறநாட்டு செய்தி ஏஜென்சிகளும் வெளியிட்ட தகவல்கள் உதயனில் பிரசுரமாகி இருந்தன.

பேராசிரியரும், அவரது துணைவியாரும் வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

1995 ஆம் ஆண்டு தைத் திங்கள் 1 ஆம் நாள் முதல் 5 ஆம் நாள் வரை நடைபெற்ற எட்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு எமக்கு 6-10-1994 திகதியிடப்பட்ட அழைப்பிதழ்கள் 26-10-94 இல் யாழ்ப்பாணத்திற் கிடைத்தன. அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றம் அனுப்பிய இந்த அழைப்பிதழுடன் மாநாட்டுப் பிறநாட்டுப் பேராளர்களுக்கெனச் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சுற்றுலாவிலும் பங்குபற்றுமாறு அழைப்பும் இணைக்கப்பட்டிருந்தது. மாநாட்டிலே இடம்பெறவிருந்த தமிழ் — ஜப்பானிய உறவு பற்றிய சிறப்புக் கருத்தரங்கிலே பங்குபற்றி எம்முடைய ஆய்வுக் கட்டுரைகளைப் படிக்கும்படி கேட்கப்பட்டிருந்தோம்.

இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகம் எம்முடைய அழைப்புக் கடிதங்களைப் பரிசீலனை செய்து "மாநாட்டு விசா" (Conference Visa) வழங்கியது. எமது சொந்தப்பணத்திலே 26-12-94 அன்று சென்னைக்குப் பயணமானோம். அங்கு தங்கியிருந்த போது சென்னையிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் (International Institute of Tamil Studies) தின் அழைப்பின் பேரில் 29-12-94 தமிழ் ஜப்பானிய ஆய்வு பற்றிச் சிறப்புரைகள் ஆற்றினோம்.

அந் நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் இராமர் இளங்கோ எமது தமிழ்—ஜப்பானிய ஆய்வு தொடர்பான சிறப்புநிலை ஆய்வு ஒன்றினை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலே செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒரு சிறப்பாய்வுத் திட்டத்தையும் எமது கூட்டயாவுப் பேராசிரியர் முனைவர் பொற்கோ ஊடாக அனுப்பியிருந்தோம். அத்திட்டத்தை உலகத் தமிழாராய்ச்சி இயக்குநரும் ஏற்றுக் கொண்டதாக எமக்கு அறிவித்தார்.

### சிறப்பு அனுமதி அட்டை

இத்தகைய தமிழாய்வுப் பிற்புலத்தில் நாம் 31-12-94 தஞ்சை நகர் சென்றோம். அங்கு எம்மைப் பேராளர்களாகப் பதிவு செய்து, பேராளர்களுக்கென நிழற்படங்களுடன் தயாரிக்கப்பட்ட சிறப்பு அனுமதி அட்டைகளும் வழங்கப்பட்டன. மாநாட்டுத் தொடக்க நிறைவு விழாக்களுக்கெனப் பெருந்தொகைப் பணத்தில் அச்சிடப்பட்ட சிறப்பு அழைப்பிதழ்களும் எமக்குத் தரப்பட்டன. பேராளர்கள் தங்குவதற்கெனப் புதிதாகக் கட்டப்பட்ட 5 இலக்கிய சதுக்கங்களில் ஒன்றான மணிமேகலைச் சதுக்கத்தில் எமக்குரிய வீடு எம்முடைய பெயர்கள் பொறிக்கப்பட்ட வாயில்களுடையதாய் அமைந்தது.

31-12-94 ஆம் திகதி இரவு அங்கு தங்கியிருந்தபோது, திடீரென எம்மை 12.45க்கு உறக்கத்திலிருந்து எழுப்பி "உங்களுடைய விசா ரத்துச் செய்யப்பட்டுள்ளது; நீங்கள் உடனடியாக இலங்கைதிரும்ப வேண்டும்" என்று காவல் துறையினர் பணித்தனர். 1-1-1995 காலை 6 மணிக்கு திருச்சிக்கு எம்மை அழைத்து வந்து உயர்ந்த சுற்றுலாப் பயணிகள் தங்கும் 'சுஜப்ரியா' வில் தங்க வைத்தனர். 2-1-95 "ஏயார் லங்கா" விமான மூலம் அனுப்பி வைத்தனர். கொழும்பு விமான நிலையத்தில் எமக்கு எவ்வித சிக்கலும் இருக்கவில்லை. 8-1-95 இல் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தோம்.

ஆனால், உதயன் பத்திரிகையில் நாம் அழைப்பின்றிச் சென்றதாகவும் [5-1-95] ஜப்பானியப் பல்கலைக்கழகச் சார்பில் நாம் சென்றதாகவும் [4-1-95] செய்திகள் வெளிவந்திருந்தன. இவை தவறான செய்திகளாகும். எமது தகுதிப்பாடு அறிந்த எம்மவரே இவ்வாறு செய்திகள் வெளியிட்டிருப்பது எமக்கு வியப்பாக உள்ளது. காற்றிலே வரும் ஆதாரமற்ற செய்திகளை மக்களுக்குக் கொடுப்பதற்கு நாம் உடந்தையாக இருக்க முடியாது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

### தற்போதைய தலைவர்

எமது தமிழாய்வு அனைத்துலக நிலையிலே அறியப்பட்டதொன்று. அதனால் தான் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு ஒருங்கமைப்புக் குழு எம்மை அழைத்தது. ஆனால், தற்போதைய உலகத் தமிழாராய்ச்சி மன்றத் தலைவர் எமது ஆய்வை 13 வருடங்களாக எதிர்த்து வருபவர் எம் ஆய்வைப் பற்றிய கருத்துக்களைச் சான்று காட்டி எதிர்க்கமுடியாத நிலையிலே, நாம் சிறப்புக் கருத்தரங்கிலே கட்டுரை படிக்க இடையூறு ஏற்பட்ட போதும் அவர் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. தகுதிப்பாடு உடையவர்களே அனைத்துலக மாநாடுகளில் கட்டுரை படிக்க அழைக்கப்படுவர். ஆனால், தஞ்சை மாநாடு எமக்குத் தகுதிப்பாடு உள்ளது என்று கூறி அழைத்து பின்னர் திருப்பி அனுப்பி வைத்தது பலரையும் சிந்திக்க வைத்துள்ளது.

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள தமிழாராய்ச்சி மாநாடுகளில் இந்நிலைமை தவிர்க்கப்பட வேண்டும், அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் தமிழ் ஆய்வு மாநாடுகளை நடத்த வேண்டும், தமிழ் விழாக்களை அவ்வந் நாட்டு அரசுகள் நடத்தலாம். ஆராய்ச்சி மாநாடும் தமிழ் விழாவும் ஒரே காலகட்டத்திலே நடைபெற வேண்டியதில்லை. இதனாலேயே ஆராய்ச்சி மாநாட்டுக்குச் செல்பவருக்கும் விழாவுக்கு அரச அழைப்புப் பெற்றுச் செல்பவருக்கு மிடையே வேறுபாடு காணமுடியாது பலரும் [illegible] அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# போராட்டத்தை....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தளபதி சூசை நேற்று மாலை திறந்து வைத்தார். அங்கு பேசும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வீரகாவியம் படைத்த மாவீரர்களின் பெற்றோர்கள் பாண்ட் வாத்திய சகிதம் ஊர்வலமாக நினைவாலயத்திற்கு அழைத்துவரப்பட்டனர். பெருமளவு மக்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் ஈகச்சுடர்களை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகும் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் ஆகியோர் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியினை தென்மராட்சி சிறப்புத் தளபதி கானகன் ஏற்றி வைத்தார்.

இந் நினைவாலயத்தில் அமைக்கப்பட்ட கிளாலி கடற்பரப்பில் படையினரின் தாக்குதலால் பலியான பொது மக்கள் நினைவுக் கல்லினை யாழ். மாவட்ட சிறப்புத் தளபதி செல்வராசாவும், நினைவாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த 16 மாவீரர்களின் உருவப்படங்களை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியும் திரைநீக்கம் செய்து வைத்தனர்.

இதன் பின்னர் தென்மராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ஜெயா தலைமையில் நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. கடற்புலிகள் விசேட தளபதி சூசை தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:

ஈழப்போர் இரண்டு தொடங்கிய சிறிது காலத்தில் குடாநாட்டுக்கான சகல பாதைகளையும் மூடிவிட்டதாக ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பெருமை பாராட்டினர்.

ஆனால் அந்த நிலையை மாற்றி, கிளாலி ஊடாக பொதுமக்கள் பயணம்செய்ய வழி சமைத்தவர்கள் கடற்புலிகள்.

கிளாலிக் கடற்பரப்பில் மக்களைக் காப்பாற்றும் பணியில் 16 வேங்கைகள் களப்பலியானார்கள். ஆனால் இதே கடற்பரப்பில் 250 க்கும் மேற்பட்ட கடற்படையினரை அழித்துச் சாதனை படைத்தனர் கடற்புலிகள்.

கிளாலி கடற்பகுதியில் பயணம் செய்த பயணிகளை தாக்கி அட்டூழியம் புரிந்தனர்.

ஆனால் கடற்புலிகள் நடத்திய கரும்புலித் தாக்குதல்களால் கடற்படையினரின் மனோபலம் உடைக்கப்பட்டது.

கடற்புலிகள் பெரும் கப்பல்களையும் தாக்கி அழிக்கும் பலத்தையும் பெற்றுள்ளனர் இது எமது போராட்டத்தின் பெரும் பலமாகும் —என்றார்.

விழாவில் மற்றும் பலரும் பேசினர். (அ-117)

## தங்கத்திலான நத்தார் மடல்கள்

### சீனாவில் விற்பனையாகின

பீகிங், ஜன. 9

தங்கத்தினாலான நத்தார் வாழ்த்து மடல்கள் இம்முறை சீனாவில் பெரும் அளவில் விற்பனையாகின.

இந்த வாழ்த்து மடல் ஒன்றின் விலை 706 டொலர்கள் ஆகும்.

இரு சீன நிறுவனங்கள் இணைந்து 1,994 வாழ்த்து மடல்களைத் தயாரித்ததாகவும், நத்தாருக்கு முன்னர் முழுவதுமே விற்று முடிந்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஏழு அவுன்ஸ் நிறை உள்ள இந்த வாழ்த்துமடலில் கன்னி மரியாளின் உருவப்படமும் தேவதூதர்களும் காணப்படுகின்றனர்.

பீகிங்கில் உள்ள "ஹுவேயின்" தங்கப் பொருள் உற்பத்தி நிறுவனமும் — வடக்கு - கிழக்கு ஹொங்காய் நிறுவனமும் இணைந்து இந்த நத்தார் மடல்களைத் தயாரித்தன. [இ]

# மட்டக்களப்பில் மூளைக்காய்ச்சல்

## இதுவரை மூவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 10

மட்டக்களப்பு மாவட்டத்தில் மூளைக்காய்ச்சல் நோய் தீவிரமாக பரவி வருவதாகவும்—

இதுவரை மூவர் அந்தக் காய்ச்சலுக்குள்ளாகி இறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மூளைக்காய்ச்சல் நோய் காரணமாக குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் என்றும் ஏராளமானவர்கள் மட்டக்களப்பு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் —

கடந்த வாரம் இருவர் பலியானதாகவும்—

நேற்று முன்தினம் மற்றும் ஒருவர் மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சுகாதாரச் சீர்கேடே இந்த நோய் பரவக் காரணமாக இருப்பதால், தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன. (ஓ-3)

# அபிவிருத்தி வேலை: ஒருங்கிணைக்க முடிவு

## யாழ். அரச அதிபர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்.மாவட்ட அபிவிருத்தி வேலைகள் யாவற்றையும் ஒருங்கிணைக்க யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு — செலவுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் மத்திய அரசின் நிதியில் இருந்தும் —

பிரமாண அடிப்படையிலான வேலைத்திட்டத்துக்கு மாகாண சபையில் இருந்து கிடைக்கும் நிதியில் இருந்தும் —

திணைக்களங்களுக்கு நேரடியாகக் இடைக்கும் நிதியில் இருந்தும் — மேற்கொள்ள உத்தேசிக்கும் திட்டங்கள் யாவற்றையும் ஒருங்கிணைக்க யாழ்.அரசஅதிபர்நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்தத்திட்டங்கள் குறித்த விவரங்களை அரச அதிபர் அந்தந்தத் திணைக்களங்களிடம் கேட்டுள்ளார். [ஓ-3]

## தொழில் முன்னிலை பாடவிதானம் மாற்றம்

கொழும்பு, ஜன. 10

தொழில் நுட்ப, தொழில் முன்னிலைப் பாடவிதானம் மாற்றியமைக்கப்பட்டு வருகிறது.

புதிய பாடவிதானத்தின் படி தொழில் வாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட கல்வி, பாடசாலையில் இருந்து வெளியேறியோருக்கு போதிக்கப்படும்.

கம்பியூட்டர் கல்வி, சிவில் விஞ்ஞானத் தொழில்நுட்பம், தங்க ஆபரண உற்பத்தி ஆகிய வற்றில் புதிய பாடவிதானங்கள் அமையும்.

பயிற்சி முடிவில் சித்தியடைந்து வெளியேறும் பயிலுநர்கள் பொருத்தமான தொழில் முயற்சியில் வேலை வாய்ப்பு பெறுவார்கள். (க-3)

## ஆசிரியருக்கு பயண ஏற்பாடு

யாழ்ப்பாணம் ஜன.10

வன்னி பெருநிலப்பரப்புக்கு தெரிவாகியுள்ள கல்வி மேம்பாட்டுக் கழக ஆசிரியர்களுக்கு பயண ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சகலஆசிரியர்களையும்இன்று நண்பகல் 12 மணிக்கு தமிழீழ கல்விக் கழக நடுவப்பணிமனைக்கு சமுகமளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

## விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ். பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் கடந்த வாரம் முதல் பிறப்பு இறப்பு விவாக அத்தாட்சிப் பத்திரம் பெறுவதற்கான சகல விண்ணப்பங்களும் மீண்டும் ஏற்கப்படுகின்றன.

இந்த விண்ணப்பங்களை ஏற்பது ஒரு வார காலமாக நிறுத்தப்பட்டிருந்தது. (இ-100)

## செயலக சிற்றுண்டி சாலை

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ். செயலக சிற்றுண்டிச்சாலை கடந்த 2ஆம் திகதி யாழ். அரச அதிபர் க. பொன்னம்பலத்தினால் திறந்து வைக்கப்பட்டது.

திருத்த வேலைகள் காரணமாக ஒரு மாதமாக மூடப்பட்டிருந்த இச் சிற்றுண்டிச் சாலையின் திறப்பு விழா வைபவத்தில் செயலக உயரதிகாரிகள் உட்பட சகல ஊழியர்களும் கலந்து கொண்டனர். (இ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 181 பேரை விடுவிக்குமாறு விசாரணைக்குழு சிபார்சு

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழும் அவசர காலச் சட்டத்தின் கீழும் முகாம்களிலும் சிறைகளிலும் நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டிருப்பர்கள் பற்றி விசாரணை செய்வதற்குநியமிக்கப்பட்ட குழு 181 பேரை விடுவிக்குமாறு பாதுகாப்பு அமைச்சுக்கு சிபார்சு செய்துள்ளது.

ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. சொய்சா தலைமையிலான 5 அங்கத்தவர்களைக் கொண்டகுழு தடுத்து வைக்கப்பட்டிருந்த 632 பேரை விசாரணை செய்த பின்னர் இவ்வாறு சிபார்சு செய்திருக்கிறது.

குழுவின் இந்த சிபார்சு பாதுகாப்பு அமைச்சிற்கு சமர்பிக்கப்படும்-

குழுவின் இறுதி அறிக்கை நீதி அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸிடம் நேற்று சமர்பிக்கப்பட்டது. (ஐ-4)

## ஐ.தே.க எம்.பி மகிழ்ச்சி தெரிவிப்பு

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே போர் இடைநிறுத்தப் பிரகடனம் ஏற்பட்டிருப்பது தமக்கு மகிழ்ச்சியை தருவதாக ஐ தே.க நாடாளுமன்ற உறுப்பினரான கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

## போர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வதுடன், எமது உறுப்பினர்களின் அறிவுறுத்தல், ஆலோசனைகளின்படி செயற்பட்டு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்''.— இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கும் விடயங்கள் மூன்றாம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளன.

## பகல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் விரிகுடாவில் ஆனையிறவு ஊடாக பிரதான பாதையின் மேற்கே கல்முனை முனையையும் யாழ் கோட்டையையும் இணைக்கும் எல்லையில் இருந்து மேற்குக்கு-அரியாலையில் இருந்து தெற்குக்கு இடைப்பட்ட பிரதேசம் — பருத்தித் துறை கடற்கரை பரப்பின் ஊடாக கடல்மைல் இரண்டு கடற்திசைக்கு — வல்வெட்டித் துறையில் இருந்து செம்பியன் பற்று வரையிலான பிரதேசம்.

கிழக்கு கடற்கரையில் இருந்து முல்லைத்தீவு வரையான இரண்டு கடல்மைல் பிரதேசம் — ஆகிய கடற்பகுதிகளிலும் மீன் பிடிப்பதற்கான தடை தளர்த்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று திருகோணமலை, மன்னார் கரையோரப் பகுதிகளிலும் கடற்றொழில்செய்வதற்கு தடைதளர்த்தப்பட்டுள்ள பிரதேசங்களின் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-ஐ)

## பதவிகளை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அரசுத் தரப்பு பிரதிநிதிகளில் ஒருவராக யாழ்.வந்த லயனல் பெர்னாண்டோ —

இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் பங்குபற்ற வந்த அரசுத் தரப்புக் குழுவில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றும் அரசுத் தரப்புக் குழுவின் தலைவர் பதவி தமக்கு வழங்கப்படாதமை குறித்து லயனல் பெர்னாண்டோ விசனமடைந்திருந்ததாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

# அமைச்சர்கள் இருவருக்கு இடையே கருத்து முரண்பாடு

கொழும்பு, ஜன. 10

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த இரு அமைச்சர்களுக்கு இடையே பகைமை நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வாவுக்கும் பௌசிக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதால், கொழும்பு மாநகர சபையில் உள்ள ஸ்ரீ ல. சு கட்சி உறுப்பினர்கள் குழப்பமடைந்துள்ளனர் என்று கூறப்படுகின்றனர்.

கொழும் மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு தத்தமது ஆதரவாளரே தெரிவு செய்யப்பட வேண்டும் என இரு அமைச்சர்களும் முரண்டுபிடித்து வருகின்றனர் என்று:—

நிமல் சிறிபால டி சில்வா, விக்டர் தாபரேயையும், பௌசி ஆனந்த பிரேமசிங்காவையும் ஆதரித்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-10)

## வாயுக்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தீ பரவ ஆரம்பித்ததை அடுத்து சுமார் எட்டு கிலோ மீற்றர் சுற்றாடலில் இருந்த — ஐயாயிரத்துக்கும் அதிகமான — மக்கள் உடனடியாக அப்பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

இத்தீயினால் பெருமளவு ''பாம்'' மரங்களும், நெல் வயல்களும் கருகி நாசமாகியுள்ளன.

இத்தீயை அணைப்பதாயின் அதற்கு வெளிநாட்டில் இருந்து விசேட உபகரணங்கள் அவசரமாகத் தருவிக்கப்படவேண்டும் என வாயு உற்பத்தித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

வெளிநாட்டிலிருந்து உரிய கருவிகள் வரவழைக்கப்பட்டாலன்றி நெருப்பு எப்போது அணையும் என்பதை இப்போதைக்குக் கூற முடியாது என பி. பி. ஸி. குறிப்பிட்டது. [உ]

## மீன் பிடிக்க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யும் நிலை ஏற்படலாம் என்றும் —

எனவே —

இராணுவ முகாம் மற்றும் இராணுவ பிரதேசங்களின் கரைப் பகுதியில் இருந்து 600 மீற்றர் பிரதேசம் எவரும் நடமாடாத பகுதி என்பதைக் கருத்தில் கொண்டு செயற்படுமாறும் —

அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளை சேர்ந்த மீனவர்கூட்டுறவுச் சங்கங்கள், தொழிலில் ஈடுபடும் மக்களுக்கு ஒழுங்கு விதிகளை அறிவுறுத்தி நடைமுறைப் படுத்துமாறும் அதில் கேட்கப்பட்டுள்ளது.

(மற்றொரு செய்தி மூன்றாம் பக்கத்தில்)

உ-ஐ)

## கொழும்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் பேச்சுத் தொடர்பான செய்திகளை அன்று மாலையே கொழும்பில் செய்தியாளர்களுக்கு வழங்கமுடியும் என்ற காரணத்தாலும்—

செய்தியாளர்களை இங்கு அழைத்து வருவதற்கு முயற்சிகள் எடுக்கப்படமாட்டா என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

பி. பி. ஸியின் இரு செய்தியாளர்களும், ''வாஷிங்டன் போஸ்ட்'' பத்திரிகையின் செய்தியாளர் ஒருவரும், பிரான்ஸ் செய்தியாளர் ஒருவரும் இவ்வாரம் யாழ்ப்பாணம் வரவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

முதற்சுற்றுப் பேச்சுக்கள் பற்றிய செய்திகளை சேகரிக்க இருபதுக்கும் அதிக செய்தியாளர்கள் கொழும்பிலிருந்து வந்ததும்—

இரண்டவது சுற்றுப் பேச்சுக்கு தகவல் ஒலிபரப்பு அமைச்சு, ரூபவாஹினி ஆகியவற்றின் பிரதிநிதிகளைத் தவிர வேறு செய்தியாளர்கள் எவரும் கொழும்பிலிருந்து அழைத்து வரப்படவில்லை என்பதும் தெரிந்ததே. (உ-3)


## பணம் தவறிவிட்டது

9.1.95 பகல் 12.00 மணியளவில் யாழ். பழைய பஸ் நிலையத்திற்கு அண்மையில் ரூபா 39,500/- பணம் என்வலப்புடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

திருமதி. இ. தங்கராஜா

இருபாலைச் சந்தி,
கோப்பாய்.

[34638]



யாழ். ஸ்ரீதர் அகலத் திரையில்

தினசரி 2–30க்கு மட்டும்

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து திரைப்படப் பிரிவின் தயாரிப்பில் உருவாகிய

ந. கேசவராஜனின்

★ பிஞ்சு மனம் ★

(முழுநீள வர்ணப் படம்)

தினசரி: 4.30, 6-30
சனி, ஞாயிறு 10-30, 4-30, 6-30

SILVESTER STALLONE

நடித்த

★ கிளிவ் ஹங்கர் ★

CLIFF HANGER

(திகிலூட்டும் சண்டைக் காட்சிகள் நிறைந்த வர்ணப்படம்)

(சி–138)


# மரண அறிவித்தல்கள்

## எட்வேட் சாமுவேல்

மானிப்பாய் மெமோறியல் ஒழுங்கையில் வசிப்பவரும், ஏலீம் சிறுவர் இல்லத்தில் கடமை புரிபவருமான திரு எட்வேட் சாமுவேல் 09-01-1995 அன்று கிறிஸ்துவுக்குள் நித்திரை அடைந்தார்.

இவர் கிளேரா கோணநாயகியின் கணவரும், ஜெசிந்தா, மேரி, சேக்ஸ்பியர் (பிரான்ஸ்), கிறேஸ் ஆகியோரின் தகப்பனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று 10-01-1995 மாலை 3-00மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உடுவில் சீயோன் தேவாலயத்தின் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

மரகதவில்லா,
மெமோறியல் ஒழுங்கை,
மானிப்பாய்.

[34626]

## சண்முகலிங்கம் புஸ்பநாதன்

(பிரபல வர்த்தகர், கொழும்பு)

புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், சேச்லேன், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாக கொண்டவருமான சண்முகலிங்கம் புஸ்பநாதன் 8-1-95 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம் - பராசக்தி தம்பதிகளின் அன்பு மகனும், தவதேவியின் அன்புக் கணவரும், மயூரன், பிரதீபன் (யாழ். இந்து கல்லூரி மாணவர்கள்), சுமிதா (யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்), நாகம்மாவின் அன்பு மருமகனும், சகுந்தலா, சதாசிவம் (ஆசிரியர் புங்/ ஸ்ரீகணேச மகாவித்தியாலயம்), நிர்மலா, தேவராஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சச்சிதானந்தன், திருமதி ச. பங்கயற்செல்வி (ஆசிரியை புங்/ ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம்), தனசிங்கநாதன் (மேனன் ரேடிங் கொம்பனி, கொழும்பு), விக்னேஸ்வரராஜா (ஆசிரியர்), கோகிலாதேவி, சண்முகராஜா (U. K) நடராஜா (U. K), சிவானந்தராஜா (கனடா), கலாதேவி (U K) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கா. குகபாலன் (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்), விஜயா [U K], தேன்மொழி [கனடா] ஆகியோரின் சகலனுமாவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும் இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
மயூரன்
(மகன்)

சேச் லேன்,
கொக்குவில் மேற்கு.
கொக்குவில்

(34639)

## செல்லத்துரை உலகநாதன் J. P.

(பலாலி தெற்கு, வயாவிளான்)

செல்லத்துரை உலகநாதன் J P. (ஓய்வுபெற்ற கிராமசேவையாளர், சமாதான நீதிவான், தெல்லிப்பழை ப. நோ. கூ சங்க இயக்குநர் சபை உறுப்பினர்) காலமானார்.

அன்னார் திருமதி செல்லம்மாவின் (ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை) அன்புக் கணவரும் அமரர்கள் செல்லத்துரை பொன்னம்மா தம்பதியரின் மூத்தமகனும், உதயகுமாரன் (கனடா), சந்திரகுமாரன் (கணக்காளர், கச்சேரி மன்னார்), உதயவேணி, சுரேஷ்குமாரன், (சுவிஸ்), சந்திரவேணி ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு சு சிவானந்தன் (ஆசிரியர், கைதடி நுணாவில் அ. த. க. பாடசாலை), விஜயகுமாரி (கனடா), அனுஷியா (ஆசிரியை, மன்னார் புனித சவேரியார் பெண்கள் மகா வித்தியாலயம்), திரு பா. பாஸ்கரன் (ஆசிரியர், மட்டுவில் செஞ்சோலை மகளிர் பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், திரு செ. பத்மநாதன், திருமதி உலகநாயகி, அமரர் தருமநாதன், சிவகுருநாதன் ஆகியோரின் சகோதரரும், சைவப்புலவர் சு. செல்லத்துரை (அதிபர், மெய்கண்டான் மகா வித்தியாலயம்), திருமதி ச. செல்வநாயகி, [ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை இணுவில்], திருமதி ஏ. செல்வமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், அமரர் தி. சி சண்முகலிங்கம், திரு க இராசேந்திரம், திருமதி சிவகாமசுந்தரி ஆகியோரின் சகலனும், மட்டுவில் வடக்கு திருமதி அ. சுப்பிரமணியம், வயாவிளான் திரு திருமதி கு. கதிரேசு [ஓய்வு பெற்ற ஆசிரியர்], மல்லாகம் திரு. திருமதி கு கந்தசாமி [ஓய்வு பெற்ற கிராம சேவையாளர், திருமணப் பதிவாளர்], சண்டிலிப்பாய் திரு. திருமதி பாலசுந்தரம் ஆகியோரின் சம்பந்தியும், சியாளி, விமோக்ஷன், கோபிசந்தர், சியாம்சுந்தர், விபூஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-01-95) செவ்வாய்க்கிழமை காலை 10-30 மணியளவில் மல்லாகம், பங்களா வீதி ''ராஜவில்லா'' இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்;
செ- உ. சந்திரகுமாரன்
(மகன்)

''இராஜவில்லா''
மல்லாகம்.

[34627]


யாழ். பல்கலைக்கழகம்

மகாபொல கொடுப்பனவு

முதலாம் வருட மாணவர்களுக்கான 6 ஆம், 7 ஆம், 8 ஆம் தவணைப்பணமும், ஏனைய மாணவர்களுக்கான 9 ஆம் தவணைப்பணமும் யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கொடுப்பனவிற்கான நேர அட்டவணை பல்கலைக்கழக அறிவித்தல் பலகைகளில் இடப்பட்டுள்ளது.

— பதிவாளர்.

சி/136)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கலைப்பீட சகல வருட மாணவர்களுக்கும்:

கலைப்பீட சகல வருட மாணவர்களுக்குமான விரிவுரைகள் யாவும் 17-01-95 செவ்வாய்க்கிழமை காலை தொடங்கும் என அறியத் தருகின்றேன். விடுதி மாணவர்கள் 16-01-95 அன்று மாலை தங்கள் விடுதிகளுக்கு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

— பதிவாளர்

யாழ்ப்பாணப்
பல்கலைக் கழகம்.
09-01-1995



புனித பத்திரிசியார் கல்லூரி

யாழ்ப்பாணம்

க. பொ. த. (உ. த.) அனுமதி

விண்ணப்பம்

மேற்படி வகுப்பிற்கு (கலை / வர்த்தகம் / விஞ்ஞானம் / கணிதம்) அனுமதிபெற விரும்புவோர். 17 — 01 — 1995 இற்கு முன் விண்ணப்பிக்கவும். தமிழீழ கல்விப் பொதுத் தராதரப் பத்திர தேர்வு முடிவின் அடிப்படையில் அனுமதிகள் வழங்கப்படும்.

அதிபர்

(சி/139)


## 31-ம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்: 20 — 05 — 1952



விண்ணில்: 11 — 12 — 1994

அமரர்

முத்தையா சிவஞானம்

ஐயா! நீங்கள் எம்மைப்பிரிந்து மாத மொன்றாகியும், தங்கள் நினைவை மறக்க முடியவில்லை. ஆம் எப்படியையா மறக்க முடியும். மண்ணில் எம்முடன் வாழ்ந்த நாளில் எங்களை வாழ வைத்தீர்கள். மறப்போமா தங்கள் இனிய நினைவுகளை. விண்ணிலிருந்து தெய்வமாய் எங்களை வழி நடத்த வேண்டி இந்நாளில் அஞ்சலிக்கின்றோம்.

ஆறாத்துயரில் துயருறும்:
மனைவி, மகன்,
தாய், சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்கள், மைத்துனிகள்,
மருமக்கள் மற்றும் நண்பர்கள்.

''மலர் வாசா'',
சுதுமலை மத்தி,
[illegible]

[34568]

# மரண அறிவித்தல்கள்

## ஆறுப்பிள்ளை குகானந்தன்

(சாட்டட் பொறியியலாளர் - லங்கா சிமெந்து நிறுவனம்)

அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வண்ணை மேற்கு ஐயனார் கோவிலடியை வதிவிடமாகக் கொண்டவரும் (சாட்டட் பொறியியலாளர் லங்கா சிமெந்து நிறுவனம்) ஆகிய ஆறுப்பிள்ளை குகானந்தன் அவர்கள் 9 - 1 - 95 திங்கள் மாலை காலமானார் அன்னார் சுலோசனாவின் அன்புக் கணவரும், நிருஷனின் அன்புத் தந்தையாரும், ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் ஆறுப்பிள்ளை — செல்லம்மா தம்பதிகளின் அன்பு மூத்த புதல்வனும், இளங்கோ (ஆசிரியர், மானிப்பாய் மகளிர் கல்லூரி) அவர்களின் அன்புத் தமையனாரும், டாக்டர் தி. கங்காதரன் — சீத்தாதேவி தம்பதிகளின் அருமை மருமகனும், டாக்டர் சந்திரிக்கா குமரன், தங்கராஜா ((அவுஸ்திரேலியா), ஹரிச்சந்திரன், நாகேந்திரா (பொறியியலாளர் சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், உடுவில் கந்தையா (ஓய்வுபெற்ற அதிபர்) தம்பதிகளின் அருமைப் பெறாமகனும், மட்டுவில் சுந்தரலிங்கம் (கணக்காளர் கச்சேரி, யாழ்ப்பாணம்), மட்டுவில் சிவராஜா (விகிதர் கல்வித் திணைக்களம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அளவெட்டி புலவர் திருநாவுக்கரசு (மாவட்ட நீதிபதி மன்னார்) அவர்களின் அன்பு மருமகனும், கைதடி சின்னம்மா வீரசிங்கம், மட்டுவில் நாகம்மா ஆறுமுகம் ஆகியோரின் அன்புப் பெறாமகனும், சரவணமுத்து(ஓய்வுபெற்ற வருமானவரி ஆணையாளர் மலேசியா) அவர்களின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை 10 - 1 - 95 பிற்பகல் 3.00 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
டாக்டர் தி. கெங்காதரன்
(மாமனார்)

வண். மேற்கு வைத்தியசாலை,
18, ஐயனார் கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(34642)

## கணபதிப்பிள்ளை தம்பையா

தையிட்டியை பிறப்பிடமாகவும், தற்சமயம் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தம்பையா 9-1-95 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை தங்கம்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், செல்லமுத்துவின் அன்புக் கணவரும் குருநாதபிள்ளை, தர்மலிங்கம், தம்பிராசா (பொறியியலாளர் - அவுஸ்திரேலியா) லோகராசா, செல்வராணி, யோகராணி, புஸ்பராணி, இந்திராணி ஆகியோரின் அருமைத் தந்தையும், விமலாதேவி, சியாமளாதேவி, ஜெயமாலா (அவுஸ்திரேலியா) புஸ்பமாலா, காலஞ் சென்ற பொன்னுத்துரை, சிவசுப்பிரமணியம் (ஓமான்) பத்மநாதன் (ஓமான்), சிறிதரன் (டோகா) ஆகியோரின் அன்பு மாமனும், சக்திக்குமார்,(கனடா) காலஞ் சென்ற உதயகுமார், ஜெயக்குமார், அனுஜா, மயூரன் (அவுஸ்திரேலியா), மாதுரன் (அவுஸ்திரேலியா), லாவண்யன், திரு. திரு இ குகனேசன் ஜெயந்தி (கனடா), பிறேமலதா (விவசாயபீடம்,கிளிநொச்சி) ஜெயமாலா, ஜெயவதனி, ஜெயந்தன், கீதானந், மைதினி, அச்சுதன், கபிலன், அபர்னா ஆகியோரின் அன்புப் பேரனும், ஷரன்யாவின் (கனடா) பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக அவரது தாவடி இல்லத்திலிருந்து இன்று (10-1-95) பிற்பகல் 2. 00 மணி அளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, தகனம் செய்யப்படும்.

தகவல்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டன்.

மானிப்பாய் வீதி,
தாவடி.

(34641)

இப்பத்திரிகை ... உதயன் ... யாழ்ப்பாணம் ... 10—01—1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org